

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

ஆண்டு
TAHUN
**2**

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி


Penulis
Saraswathy Kannan
Sivapakiam Pallaiyappan

ஆசிரியர்கள்
சரஸ்வதி கண்ணன்
சிவபாக்கியம் பாலையப்பன்

Editor
Pithaullah Hayath Basha
Haji Mydin Sultan

பதிப்பாசிரியர்கள்
பிதாவுல்லாஹ் ஹயாத் பாஷா
ஹாஜி மைதீன் சுல்தான்

Pereka Bentuk
Prabu Palani

வடிவமைப்பாளர்
பிரபு பழனி

Ilustrator
Azrul Helmi Abd. Wahab
Armizan Yunos
Maseh Supian

ஓவியர்கள்
அஸ்ருல் ஹெல்மி அப்துல் வஹாப்
அர்மிசான் யூனூஸ்
மாசேஹ் சுப்பியான்



Multi Educational Book Enterprise
2017

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku: 0183

KPM2017 ISBN 978-967-2046-08-0

Cetakan Pertama 2017

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:18 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- SJKT Kajang, Selangor.
- SJKT Bangi, Selangor.
- SJKT Serdang, Selangor.
- SJKT Ampang, Selangor.
- Akhbar Malaysia Nanban.
- Akhbar Makkal Osai.
- Barathi Fine Arts, Taman Melawati, Kuala Lumpur.

# உள்ளடக்கம்


முன்னுரை V

**தொகுதி 1 : மொழி**
1. புத்தகப் பூங்கா 1
2. சுட்ட பழம் 2-3
3. புத்தகத் திருவிழா 4-5
4. செய்யுளும் மொழியணியும் 6
5. இலக்கணம் 7

**தொகுதி 2 : சுகாதாரமும் நற்பண்பும்**
1. சுத்தம் காப்போம் 8
2. பாடுவோம் 9
3. நல்லதும் தீயதும் 10
4. செய்யுளும் மொழியணியும் 11
5. இலக்கணம் 12-13

**தொகுதி 3 : போக்குவரத்து**
1. பயணம் செய்வோம் 14
2. நான் புதியவன் 15
3. கடலில் நான் 16-17
4. செய்யுளும் மொழியணியும் 18
5. இலக்கணம் 19

**தொகுதி 4 : கல்வி**
1. கவிதையின் தந்தை 20
2. சிறந்த மனிதர் 21
3. நல்லாசான் 22
4. செய்யுளும் மொழியணியும் 23
5. இலக்கணம் 24-25

**தொகுதி 5 : பண்பாடு காப்போம்**
1. பாரம்பரிய நடனங்கள் 26-27
2. அக்காவின் திருமணம் 28
3. மதிக்கும் பண்பு 29
4. செய்யுளும் மொழியணியும் 30
5. இலக்கணம் 31-32

**தொகுதி 6 : குடியியல்**
1. நல்ல முடிவு 33
2. குடும்ப தினம் 34-35
3. தன்னம்பிக்கை 36
4. செய்யுளும் மொழியணியும் 37
5. இலக்கணம் 38-39

**தொகுதி 7 : கலை**
1. திருத்திச் சொல்லுங்கள் 40
2. கலைகள் கற்போம் 41
3. மேடை நாடகம் 42-43
4. செய்யுளும் மொழியணியும் 44
5. இலக்கணம் 45

**தொகுதி 8 : உயிரினங்களும் பொருளாதாரமும்**
1. எங்களின் ஒலி 46
2. முன்னேற்றம் 47
3. ஒலிகள் பலவகை 48
4. செய்யுளும் மொழியணியும் 49
5. இலக்கணம் 50-51

**தொகுதி 9 : அனுபவங்கள்**
1. விலங்ககம் சென்றோம் 52-53
2. பாட்டி சொன்ன கதை 54-55
3. விலங்குகளின் ஒலிகள் 56
4. செய்யுளும் மொழியணியும் 57
5. இலக்கணம் 58

**தொகுதி 10 : வணிகவியல்**
1. புத்திசாலித்தனம் 59
2. தீபாவளிச் சந்தை 60-61
3. நாமும் அறிவோம் 62
4. செய்யுளும் மொழியணியும் 63-64
5. இலக்கணம் 65-66

**தொகுதி 11 : போதைப் பொருள்**
1. புரிந்து நடந்திடு 67
2. கண்காட்சி 68-69
3. போதையை ஒழிப்போம் 70-71
4. செய்யுளும் மொழியணியும் 72
5. இலக்கணம் 73-75

**தொகுதி 12 : சமூகம்**
1. ஒருமைப்பாடு 76
2. பசுமைத் திட்டம் 77-78
3. திருமண வைபவம் 79
4. செய்யுளும் மொழியணியும் 80
5. இலக்கணம் 81-82

**தொகுதி 13 : பாரம்பரிய விளையாட்டு**

1. விளையாடிப் பார்ப்போம் 83
2. தமிழர் விளையாட்டு 84
3. கபடி ஆடுவோம் 85-86
4. செய்யுளும் மொழியணியும் 87
5. இலக்கணம் 88-91

**தொகுதி 14 : உணவு**

1. வல்லவன் நான் 92
2. காய்கள் 93
3. சொற்புதையல் தேடு 94
4. செய்யுளும் மொழியணியும் 95
5. இலக்கணம் 96

**தொகுதி 15 : பாதுகாப்பு**

1. எங்கும் பாதுகாப்பு 97
2. நல்ல படிப்பினை 98-99
3. எதிலும் கவனம் 100
4. செய்யுளும் மொழியணியும் 101
5. இலக்கணம் 102

**தொகுதி 16 : அறிவியல்**

1. கதை கூறுவோம் 103
2. சிரித்து மகிழ்வோம் 104
3. எங்கள் ஆராய்ச்சி 105
4. செய்யுளும் மொழியணியும் 106
5. இலக்கணம் 107

**தொகுதி 17 : குடும்பம்**

1. பாட்டியின் வீடு 108-109
2. மகிழ்ச்சியான குடும்பம் 110-111
3. பட்டமளிப்பு விழா 112-113
4. செய்யுளும் மொழியணியும் 114
5. இலக்கணம் 115

**தொகுதி 18 : நன்னெறி**

1. உனக்கழகு 116
2. கடமைகளைப் போற்று 117
3. நல்ல நண்பன் 118
4. செய்யுளும் மொழியணியும் 119
5. இலக்கணம் 120-121

**தொகுதி 19 : சுற்றுச்சூழல்**

1. சுத்தம் செய்வோம் 122-123
2. வருமுன் காப்போம் 124-125
3. மூலிகைப் பூங்கா 126-127
4. செய்யுளும் மொழியணியும் 128
5. இலக்கணம் 129

**தொகுதி 20 : மனமகிழ் நடவடிக்கைகள்**

1. எங்களை அறியுங்கள் 130-131
2. சிரிப்பலை 132
3. வண்ண மீன்கள் 133
4. செய்யுளும் மொழியணியும் 134
5. இலக்கணம் 135-136

**தொகுதி 21 : வரலாறு**

1. திருத்தி வாசித்திடுக 137
2. உலகில் நாங்கள் 138-139
3. கண்டறிந்து வாசித்திடுக 140
4. செய்யுளும் மொழியணியும் 141
5. இலக்கணம் 142

**தொகுதி 22 : இலக்கியம்**

1. இலக்கிய மேடை 143
2. நீதி கேட்டாள் 144-145
3. சிறந்த மன்னர் 146-147
4. செய்யுளும் மொழியணியும் 148
5. இலக்கணம் 149

**தொகுதி 23 : சமயம்**

1. கேட்டு உரையாடுக 150-151
2. வழிபாடு 152
3. தேர்த் திருவிழா 153
4. செய்யுளும் மொழியணியும் 154-155
5. இலக்கணம் 156

**தொகுதி 24 : தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்**

1. தூய தமிழ் 157
2. மின்னஞ்சல் 158
3. திறன்பேசி 159
4. செய்யுளும் மொழியணியும் 160-161
5. இலக்கணம் 162

# முன்னுரை

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி
ஓங்கத் துலங்குக வையகமே

- பாரதியார்

நம் நாட்டின் கல்வியானது, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து மாணவர்களின் தன்னாற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும்.

தமிழ்மொழிக் கல்வி நம் மாணவர்களின் தனி ஆற்றலையும் சுயதிறனையும் மேலோங்கச் செய்யும். இருபத்து நான்கு தொகுதிகளை உள்ளடக்கிய இப்பாடநூல், நமது தாய்மொழியைத் திறம்படக் கற்பிக்கும் வழிகாட்டிச் சாதனமாய் அமையும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு தொகுதியும் ஒவ்வொரு கருப்பொருளைக் கொண்டு அதற்கேற்பக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனப் பிரிக்கப்பட்டுள்ளது. செய்யுள் மொழியணி, இலக்கணம் என்ற மொழிக்கூறுகளும் உள்ளன.

மாணவர்கள் சரளமாகப் பேசவும் எழுதவும் மட்டுமின்றி சிறந்த கற்பனைத் திறனைப் பெறவும் இப்பாடநூல் தளமாக அமையும். பன்னிரெண்டு தொகுதிகள் சேர்ந்து ஒரு நடவடிக்கை நூலென இரண்டு நூல்கள் உள்ளன. கற்றல் தரத்திற்கு ஏற்பப் பலதரப்பட்ட நடவடிக்கைகளை இந்நடவடிக்கை நூலில் காணலாம்.

இப்பாடநூலில் ஒவ்வொரு பாடத்திற்கும் விரவி வரும் கூறுகள் (வி.வ.கூ), உயர்நிலைச் சிந்தனைத் திறன் (உ.சி.தி), 21ஆம் நூற்றாண்டிற்கான மாணவரின் சுயவிவரம் போன்றவையும் இணைக்கப்பட்டுள்ளன.

கற்றலில் மேலும் சிறப்புச் சேர்க்க ஆசிரியர்கள் சில உயர்தரச் சிந்தனைக் கேள்விகளை இணைப்பது சிறப்பாகும். பல திறமைகளை ஒருங்கே பெற்ற நம் ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்திச் சிறந்த மாணவர்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இறுதியாக, இப்பாடநூலைப் படைப்பதற்கு உதவியாக இருந்த மலேசியக் கல்வி அமைச்சுக்கு மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே
வெல்லும் தரமுண்டு தமிழர்க்கு இப்புவிமேலே

- பாரதிதாசன்

அன்புடன்,
ஆசிரியர்கள்.

# மொழிக்கூறுகளுக்கான படவுருக்கள்

**தொகுதிகள்**

**பாடம்**

**கேட்டல் பேச்சு**

**வாசிப்பு**

**எழுத்து**

**இலக்கணம்**

**சொல்வளம்**

**செய்யுளும் மொழியணியும்**

**உயர்நிலைச் சிந்தனை**

**ஆசிரியர் குறிப்பு**

## இணையத் தளம் QR நோக்குக் குறியீடு

App Store | Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணை புரிகிறது.

## ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

App Store | Google play

முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

**இங்கு நோக்குக**

Zappar நோக்குக் குறியீடு

# தொகுதி 1 மொழி

## பாடம் 1 புத்தகப் பூங்கா




### நிரல்படுத்தி உரையாடுக.

- புத்தகங்களை வாசித்தல்
- மாணவர்கள் குழுவில் அமர்தல்
- ஆசிரியருடன் செம்மொழிப் பூங்கா செல்லுதல்
- புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்
- படித்தவற்றைக் கலந்துரையாடுதல்
- புத்தகப் பூங்காவைப் பார்வையிடுதல்
- தமிழ்மொழி ஆசிரியர் விளக்கம் தருதல்

உன் வீட்டில் ஒரு புத்தகப் பூங்காவை அமைக்க நீ என்ன செய்வாய்?

1.3.2 - செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- வாக்கியங்களை நிரல்படுத்திக் கூறுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 1-2

பாடம் 2 சுட்ட பழம்

## கதையை ஏற்ற தொனியுடன் வாசித்திடுக.

ஔவையார் ஓர் அடர்ந்த காட்டின் வழியே சென்று கொண்டிருந்தார். வெயில் கடுமையாக இருந்தது. பாதையும் கரடு முரடாக இருந்தது.



ஔவை களைத்துப் போனார். சிறிது நேரம் இளைப்பாறினார். ஒரு நாவல் மரத்தடியில் அமர்ந்தார். சிறுவன் ஒருவன் அந்த மரக்கிளையில் அமர்ந்திருந்தான்.

ஔவையார் அச்சிறுவனை நோக்கி, “சிறுவனே! எனக்குப் பசிக்கிறது. கொஞ்சம் பழம் பறித்துப் போடுகிறாயா?” என்றார்.



உடனே அச்சிறுவன், “பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்றான். ஔவையாரும் “பெரியோரைப் பரிகாசம் செய்யாதே! எனக்குச் சுடாத பழமே தேவை,” என்றார்.

சிறுவன் கிளைகளை வேகமாக உலுக்கினான். பழங்கள் கீழே உதிர்ந்தன. ஔவை, கனிந்த பழங்களைப் பொறுக்கிக் கொண்டார். பழங்களின் மேல் மண் ஒட்டியிருப்பதைக் கண்டு தம் வாயால் ஊதினார்.



ஔவையின் அந்தச் செய்கையைக் கண்டு சிறுவன் நகைத்தான். கிண்டலாகப் பேசவும் ஆரம்பித்தான்.

ஔவைக்கு அப்பொழுதுதான் தெரிந்தது சுடாத பழம் என்றால் காய் என்று. தமிழ்ப் புலவரான தம்மையே சிறுவன் சாமர்த்தியமாகப் பேசி ஏமாற்றிவிட்டானே என்று ஆச்சரியமுற்றார்.



‘கற்றது கைம்மண்ணளவு தானே’ என்று தனக்குத் தானே பேசிக் கொண்டு நடந்தார்.

**இணையத் தளம்**
https://youtu.be/7IbLAGmtCG0

2.3.2 - கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.


**ஆசிரியர் குறிப்பு**
- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசித்தல்.
- கதையை வாசித்துப் பாகம் ஏற்றுக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 3


## பாடம் 3 புத்தகத் திருவிழா

**வாசித்து நிரல்படுத்தி எழுதுக.**




- பணம் செலுத்த வரிசையில் நின்றனர்.
- பேருந்து கண்காட்சியகத்தைச் சென்றடைந்தது.
- ஆசிரியர்களும் மாணவர்களும் பேருந்தில் ஏறினர்.

புத்தகத் திருவிழா நடத்தப்படுவதன் நோக்கம் என்னவாக இருக்கும்?




- விரும்பிய புத்தகங்களை வாங்கியதில் மகிழ்ச்சியடைந்தனர்.
- அதிகமான தமிழ்மொழிப் புத்தகங்கள் இருந்தன.
- மாணவர்கள் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தனர்.

3.5.1 - வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- புத்தகக் கண்காட்சி பற்றி உரையாடுதல்.
- வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 4

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனை அறிக.



முத்து எனும் வாலிபன் ஒரு முரடன். அவன் எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றினான். தீய நண்பர்களுடன் சேர்ந்தான். பெற்றோரை ஏமாற்றிப் பணம் வாங்கினான். நண்பர்களுடன் சேர்ந்து சூதாடினான்.

சூதாட்டத்தில் தோற்றுப் போனதால் நண்பர்களுடன் வீணே வாக்குவாதம் செய்தான். வாய்ச் சண்டை முற்றி கைகலப்பில் முடிந்தது. இவர்களின் சண்டையைப் பார்த்த பொதுமக்களில் ஒருவர் காவல் துறையினரிடம் புகார் செய்தார்.

காவல் துறை அதிகாரிகள் அவ்விடத்திற்கு விரைந்து வந்தனர். முத்துவையும் அவன் நண்பர்களையும் கைது செய்தனர். காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். அப்போதுதான் முத்து தன் தவற்றை நினைத்து வருந்தினான்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **சூதும் வாதும் வேதனை செய்யும்.**

  சூதாடுதலும் தேவையற்ற வாக்குவாதம் செய்தலும் துன்பத்தையே தரும்.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து சுயமாகக் கூறுதல்.
- கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் பார்த்து எழுதுதல்.
- சூழல் ஒன்றனை உருவாக்கிக் கூறச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

நடவடிக்கை நூல் | பக்கம் : 5

# பாடம் 5 இலக்கணம்

## சுட்டெழுத்துகளை அறிக.

ஒன்றனைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்குச் **சுட்டெழுத்து** என்று பெயர். இது மொழிக்கு முதலிலே நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும்.



**சுட்டெழுத்துகள் மூன்று (அ, இ, உ)**

1. அ - சேய்மைச்சுட்டு (தொலைவு)
   **எடுத்துக்காட்டு:** அங்கு, அவன், அது, அஃது
2. இ - அண்மைச்சுட்டு (அருகில்)
   **எடுத்துக்காட்டு:** இங்கு, இவன், இது, இஃது
3. உ - சேய்மைச் சுட்டுக்கும் அண்மைச் சுட்டுக்கும் இடையே உள்ள பொருளைக் குறிக்கும்.
   **எடுத்துக்காட்டு:** உங்கு, உவன்

**குறிப்பு:** அ, இ ஆகிய இரண்டு சுட்டுகள் மட்டுமே இன்றைய வழக்கில் உள்ளன. உ எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை.



## சுட்டெழுத்துகளைக் கொண்ட வாக்கியங்களை வாசித்திடுக.

1. அங்கு நிற்பவர் என் அண்ணன்.
2. இது பாலனின் புதிய மடிக்கணினி.
3. இஃது என் நண்பனின் புத்தகம்.
4. அஃது என் தங்கை வரைந்த ஓவியம்.



5.1.10 - சுட்டெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சுட்டெழுத்துகளை எடுத்துக்காட்டுடன் விளக்குதல்.
- சுட்டெழுத்து வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- சுட்டெழுத்துகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் | பக்கம் : 6-7

# தொகுதி 2 சுகாதாரமும் நற்பண்பும்

## பாடம் 1 சுத்தம் காப்போம்

### வாசித்து உரையாடுக.

தண்ணீர் தண்ணீர் தண்ணீர் - நமது
தாகம் தீர்க்கும் தண்ணீர்!
வண்ணமும் வாசமும் சுவையும் - ஒரு
வடிவமும் இல்லாத் தண்ணீர்!

கடலில் குளத்தில் கிணற்றில் - அழகு
நதியிலும் ஓடும் தண்ணீர்!
கடுமழை பெய்தால் தண்ணீர் - அடர்க்
காட்டிலும் வீட்டிலும் தண்ணீர்!

குதித்துக் களைத்த போதும் - நீர்க்
குழாயைத் தேடிட வேண்டா!
கொதித்து ஆறிய நீரை - நாம்
குடித்தால் நோய்கள் தீண்டா!

- கவிஞர் மைதீ. சுல்தான்



1.4.2 - செவிமடுத்த கவிதையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை ஏற்ற தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- கவிதை வரிகளின் பொருளை விளக்குதல்.
- கவிதையின் முக்கியக் கருத்துகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 8

## பாடம் 2 பாடுவோம்

### வாசித்து அறிக.

**பாடு!** பாடு! பாடு!
பாடு பட்டுப் பலனை நாளும்
**தேடு!** தேடு! தேடு!

**அழகு!** அழகு! அழகு!
அறிஞ ரோடு நட்புக் கொண்டு
**பழகு!** பழகு! பழகு!

**தொண்டு!** தொண்டு! தொண்டு!
தூய்மை வாழ்வும் சிறப்பும் அதனால்
**உண்டு!** உண்டு! உண்டு!

**செல்க!** செல்க! செல்க!
பள்ளி சென்று கல்வி கற்று
**வெல்க!** வெல்க! வெல்க!

**எறும்பு!** எறும்பு! எறும்பு!
எறும்பைப் போல இருக்க நாளும்
**விரும்பு!** விரும்பு! விரும்பு!

- கவிஞர் பொன்முடி








2.2.18 - சந்தச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வரிகளைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.
- சந்தச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்தல்.
- சந்தச் சொற்களைப் பட்டியலிட்டு வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி    **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை    21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : ௯

# பாடம் 3 நல்லதும் தீயதும்

## கவிதையை வாசித்து எழுதுக.



**கனி** இருக்கக் காயினைக்
கவர்ந்து தின்னல் நல்லதோ
**இனி** திருக்கத் தீயதை
ஏற்றுச் செய்ய நினைப்பதோ?

**நிழல்** இருக்க வெயிலிலே
நடந்து செல்லு வார்களோ?
**குழல்** இருக்க இடியினைக்
கேட்டு மகிழு வார்களோ?

**அன்பிருக்க** நெஞ்சிலே
அழுக்கு எண்ணம் வைப்பரோ?
**பண்பிருக்க** விலங்குபோல்
பழகி வாழல் நல்லதோ?

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3.3.18 - சந்தச் சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கவிதையை ஏற்றத் தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- கவிதையில் உள்ள சந்தச் சொற்களை அடையாளம் காணச் செய்தல்.
- மாணவர்களைச் சுயமாகச் சந்தச் சொற்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 10-12

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்


## திருக்குறளையும் பொருளையும் அறிக.



என் பெயர் கபிலன்.
நான் ஓர் இராணுவ விமானி.
நான் தினமும் கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குவேன்.



என் பெயர் ரம்லி.
நான் ஒரு விஞ்ஞானி.
நான் தினமும் ஐந்து வேளை தொழுவேன்.



என் பெயர் சின் மோய்.
நான் ஒரு மருத்துவர்.
நான் சீனக் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவேன்.



என் பெயர் சிசிலியா.
நான் ஒரு கல்வி அதிகாரி.
நான் தேவாலயம் சென்று இறைவனை வணங்குவேன்.

### திருக்குறளும் பொருளும்

- **கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
  **நற்றாள் தொழாஅர் எனின். (2)**
  நன்கு கல்வி கற்ற ஒருவர் தூய அறிவின் வடிவாக விளங்கும் இறைவனை வணங்காவிடில், அவர் கற்ற கல்வி பயனற்றதாகி விடும்.

4.3.2 - இரண்டாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதிகளை வாசிக்கச் செய்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் கூறச் செய்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


நடவடிக்கை நூல் I பக்கம் : 13


## பாடம் 5 இலக்கணம்

### ஒருமை, பன்மை அறிக.

- பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது **எண்** ஆகும்.
- எண் இருவகைப்படும். அவை, ஒருமை, பன்மை எனப்படும்.
- ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒருமை.
  ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

**எடுத்துக்காட்டு:**



## ஒருமை, பன்மை வாக்கியங்களை வாசித்து அறிக.

1. வெள்ளை **அன்னம்** கண்டேன்.
   குளத்தில் **அன்னங்கள்** நீந்தின.



2. இது பெரிய **சட்டம்**.
   இவை மரச் **சட்டங்கள்**.

3. தம்பி **வட்டம்** வரைந்தான்.
   படத்தில் **வட்டங்கள்** இருந்தன.





4. **காகம்** வடையைத் தின்றது.
   **காகங்கள்** கிளைகளில் அமர்ந்தன.

5. **மாம்பழம்** இனிப்பாக இருந்தது.
   அப்பா **மாம்பழங்கள்** வாங்கினார்.

6. மாணவர்கள் **நாடகம்** பார்த்தனர்.
   **நாடகங்கள்** சிறப்பாக இருந்தன.



7. தங்கை **கடிதம்** எழுதினாள்.
   **கடிதங்கள்** அஞ்சலில் அனுப்பப்பட்டன.

8. காவியா **வாக்கியம்** அமைத்தாள்.
   **வாக்கியங்கள்** நீளமாக இருந்தன.




9. அம்மா வெள்ளிக்**குடம்** வாங்கினார்.
   கடையில் மட்**குடங்கள்** வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

10. வாள் என்பது ஓர் **ஆயுதம்**.
    கூர்மையான **ஆயுதங்கள்** பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

5.3.5 - ஒருமை பன்மையில் 'ம் - ங்' ஆக மாறும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- 'ம் - ங்' ஆக மாறும் இலக்கணத்தை விளக்குதல்.
- ஒருமை பன்மை சொற்களை வாசித்து அறிதல்.
- மாணவர்கள் மேலும் சில ஒருமை, பன்மைச் சொற்களைக் கூறப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 14-16

# தொகுதி 3 போக்குவரத்து

## பாடம் 1 பயணம் செய்வோம்

### கேள்விகள் கேட்டுப் பதில் கூறுக.




1.5.2 - எங்கு, எப்பொழுது எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.
1.5.3 - எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- போக்குவரத்துச் சாதனங்கள் பற்றி உரையாடுதல்.
- வினாக்கள் கேட்டு விடையளிக்கப் பணித்தல்.
- வினாச் சொற்களைப் பயன்படுத்தி மேலும் சில வினாக்களைக் குழுமுறையில் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 17

# பாடம் 2 நான் புதியவன்

## லகர, ழகர, ளகரச் சொற்களை வாசித்து அறிக.

**அழகான நீல** நிறம். என்னைப் பார்த்ததும் **மகிழ்ந்தார்**. அவர் **உள்ளத்தைக் கொள்ளை** கொண்டதில் எனக்கும் பெருமைதான்.

புதிதாக என்னை வாங்கியதால், கவனமாகவே செலுத்தினார். நான் சென்ற **வழி**யெல்லாம் இயற்கை **அழகை** இரசித்துக் கொண்டே சென்றேன். **மலைத்** தொடரைக் கண்டேன். **மழையில் துள்ளி விளையாடும்** சிறுவர்களைக் கண்டேன்.

**மாலை** நேரம் வந்தது. என்னைத் தன் **இல்லத்தின்** முன் நிறுத்தினார். **கலகலப்பாகப்** பேசிக் கொண்டே கையில் **குழந்தையுடன்** பெண் ஒருத்தி வந்தாள். என் **முதலாளியின்** மனைவி எனப் புரிந்துகொண்டேன். **மெல்ல** என் கதவைத் திறந்தாள். அகம் **மகிழ்ந்தாள்**.

‘இப்படியொரு **மகிழுந்து**க்காகவே இவ்வளவு நாள் காத்திருந்தேன்’ என்பதுபோல **அவளின் விழிகள்** பேசின.



### சொல்வளம்

- அமைப்பு
- பெருமை
- இயற்கை
- துள்ளி
- பார்வை

நீ உருவாக்க நினைக்கும் மகிழுந்தைப் பற்றிக் கூறுக.

2.2.15 - லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- லகர, ழகர, ளகரச் சொற்களைச் சரியாக உச்சரிக்கச் செய்தல்.
- லகர, ழகர, ளகரச் சொற்களைப் பட்டியலிடப் பணித்தல்.


**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 18-20

# பாடம் 3 கடலில் நான்

**வாசித்து லகர, ழகர, ளகரச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

என்னைச் சொகுசுக் கப்பல் என்று அழைப்பர். கடலில் பயணம் செய்வதுதான் என் தொழில். என்னுள் பயணம் செய்ய எல்லாருக்கும் பிடிக்கும். ஏனெனில், நான் அழகாக வடிவமைக்கப்பட்டிருப்பேன். நான் கடல் அலைகளைக் கண்டு அஞ்ச மாட்டேன்.







**இணையத் தளம்**
https://youtu.be/7IbLAGmtCG0

சொகுசுக் கப்பலை மக்கள் அதிகம் விரும்புவதன் காரணம் என்ன?

என்னுள் பல வசதிகள் உள்ளன. குளிர்சாதன அறைகள், பன்னாட்டு உணவுக் கடைகள், விளையாட்டு மைதானம், நீச்சல் குளம், திரையரங்கம் எனப் பல வசதிகள் உள்ளன. நீண்ட நாள்களுக்கு மக்கள் என்னுள் பயணிக்கலாம்.







## சொல்வளம்

- சொகுசு
- பயணம்
- வசதிகள்
- மைதானம்
- திரையரங்கம்

பலர் தங்களின் விடுமுறை நாள்களைக் கழிக்க என்னைத் தேடி வருவார்கள். உல்லாசமாகவும் சொகுசாகவும் பயணம் செய்வதற்கு என்னையே விரும்புவர்.

3.3.15 - லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை ஏற்ற தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்களைப் பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 21

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியை அறிக.




### பழமொழியையும் பொருளையும் அறிக

- **அன்பான நண்பனை ஆபத்தில் அறி.**

நல்ல நண்பனை அவன் நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்வதைக் கொண்டு அறியலாம்.

4.7.2 - இரண்டாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர் படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- படங்களைப் பார்த்து முழுக் கதையையும் கூறுதல்.
- பழமொழியையும் பொருளையும் மாணவர்கள் சரியாகக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 22


# பாடம் 5 இலக்கணம்

## வினாவெழுத்துகளை அறிக.

வினா எழுத்துகள் 5


அவை | எ | ஏ | யா | ஆ | ஓ | ஆகும்.

இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.



எ, யா - சொல்லின் முதல் எழுத்தாக வரும்.

**எடுத்துக்காட்டு:**
எது? யாது?



ஆ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்.

**எடுத்துக்காட்டு:**
அவனா (அவன் + ஆ)

## வினாவெழுத்துகளைக் கொண்ட, வாக்கியங்களை வாசித்திடுக.




- உனக்குப் பிடித்த புத்தகம் எது?
- நீ எங்கு வசிக்கிறாய்?
- உன்னைக் கவர்ந்த சட்டை எது?
- நண்பனின் மகிழி என்ன?
- நீ செல்ல விரும்பும் சுற்றுலாத்தலம் யாது?
- சேமிப்பின் பயன் யாது?
- அவனா உன் நண்பன்?
- அவரா உனக்கு உதவி செய்தார்?
- இவளா உன் தங்கை?



5.1.11 - வினாவெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வினாவெழுத்துகளை வாசிக்கச் செய்தல்.
- மாதிரி வினாக்களை வாசிக்கச் செய்தல்.
- வினாக்களை உருவாக்கி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 23-26

# தொகுதி 4 கல்வி

## பாடம் 1 கவிதையின் தந்தை

### நிரல்படுத்தி உரையாடுக.




- வழக்கம்போல உற்சாகமாகப் பள்ளிக்குச் சென்றேன்.
- வரிசையில் நின்று நாங்கள் வகுப்பறைக்குள் நுழைந்தோம்.
- விளங்காதவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டோம்.
- தமிழ்மொழிப் பாட ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார்.
- ஆசிரியர் அன்று திருவள்ளுவரைப் பற்றி போதனையை ஆரம்பித்தார்.
- தமிழ்மொழிப் பாடத்திற்காக ஆர்வத்துடன் காத்திருந்தோம்.
- திருவள்ளுவரின் தோற்றத்தைக் காணொளி மூலம் காண்பித்தார்.
- திருக்குறளில் 1330 குறட்பாக்கள் உள்ளதென அறிந்தோம்.

**இணையத் தளம்**
https://youtu.be/B4EEqudDkPE

1.3.2 - செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- செவிமடுத்த வாக்கியங்களை நிரல்படுத்துதல்.
- நிரல்படுத்திய வாக்கியங்களையொட்டிக் கலந்துரையாடுதல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 27-28

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 2 சிறந்த மனிதர்

### சரியான உச்சரிப்புடன் வாசித்திடுக.

பாரதிதாசன் **சிறந்த** கவிஞர். இவர் பாரதியார் மீது அதிக அன்பு கொண்டவர். எனவே, சுப்பு ரத்தினம் என்ற தமது பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார். அவரின் திறமைகள் பற்பல. அதனால், அவரைப் பாவேந்தர் என்று அழைத்தனர்.



திருமண விழா ஒன்றில் பாரதிதாசன், ‘எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி ஏழு கடல் அவள் வண்ணமடா’ எனும் தமது முதல் கவிதையைப் பாடினார். அவ்விழாவுக்கு வந்திருந்த பாரதியார் அந்த உணர்ச்சிப்பூர்வமான கவிதையைக் கேட்டு மகிழ்ந்தார். பாரதிதாசனை மனமாரப் பாராட்டினார். அதுவரை ஒருவரை ஒருவர் பார்த்திராத அவர்கள் அன்று முதல் சிறந்த நண்பர்களாகப் பழகினர்.

2.2.16 - ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- ரகர, றகர எழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் குழு முறையில் மேலும் சில ரகர, றகரச் சொற்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 29

# பாடம் 3 நல்லாசான்

## வாசித்து எழுதுக.



- இவர் என் ஆசிரியர்.
- இவர் என் அறிவியல் பாட ஆசிரியர்.
- இவர் மிகவும் பொறுப்பானவர்.
- அறிவியல் பாடத்தைத் திறமையாகச் சொல்லிக் கொடுப்பார்.
- எங்களை அறிவியல் கூடத்திற்கு அழைத்துச் செல்வார்.
- பல பரிசோதனைகளைச் செய்து பார்ப்போம்.
- ஆசிரியர் எங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிவார்.
- நாங்கள் சிறந்த புள்ளிகள் பெற உதவி செய்வார்.
- கடமைகளைச் சிறப்பாகச் செய்யும் எங்கள் ஆசிரியரைப் போற்றி மதிப்போம்.

3.3.16 - ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- படங்களுக்கு ஏற்ற வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் உள்ள ரகர, றகர எழுத்துச் சொற்களை வாசித்துப் பட்டியலிடப் பணித்தல்.
- மாணவர்கள் சில வாக்கியங்களைச் சுயமாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 30-31

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### புதிய ஆத்திசூடியையும் பொருளையும் அறிக.




அச்சம் அடிக்கடி கொள்வதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

### புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **அச்சம் தவிர்.**
  பயத்தை விட்டொழித்தல் வேண்டும்.
- **ஆண்மை தவறேல்.**
  எப்பொழுதும் வீரத்துடன் இருக்க வேண்டும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகம் ஏற்று வாசிக்கப் பணித்தல்.
- புதிய ஆத்திசூடியையும் பொருளையும் வாசித்துக் கூறச் செய்தல்.
- புதிய ஆத்திசூடிகளுக்கு ஏற்பச் சூழல் ஒன்றனை எழுதுக.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 32

## பாடம் 5 இலக்கணம்

### உணர்ச்சி வாக்கியங்களை அறிக.





#### உணர்ச்சி வாக்கியம்

- உள்ளத்து உணர்ச்சியைக் காட்டுதல்.

**எடுத்துக்காட்டு:**

1. ஆஹா! என்னே அழகு! (வியப்பு)
2. ஐயோ! வலிக்கிறதே! (நோவு, துன்பம்)
3. ஐயோ! பாம்பு! (பயம்)



#### சரியான உணர்ச்சியோடு வாக்கியங்களை வாசித்து அறிக.

- ஆஹா! இந்தச் சட்டை என்னே அழகு!
- ஐயோ! பாம்பு! பாம்பு! ஓடுங்கள்!
- ஆஹா! எவ்வளவு பெரிய வீடு!
- அடடே! அடிபட்டுவிட்டதுபோல் தெரிகிறதே!
- ஆஹா! என்னே அழகான இயற்கைக் காட்சி!
- ஐயகோ! என்ன செய்வேன்? வேறு உணவில்லையே!
- ஐயோ! என் வயிறு வலிக்கிறதே!
- ஆஹா! எவ்வளவு சுவையான உணவு!
- ஐயோ! என் காலில் இரத்தம் வருகிறதே!
- ஆஹா! எவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குகின்றனர்!
- ஐயோ! இடியும் மின்னலும் கடுமையாக இருக்கின்றனவே!
- ஐயோ! இந்த அறை மிகவும் இருட்டாக இருக்கின்றதே!





## உரையாடலை வாசித்திடுக.




உனது சேமிப்பையும் அதன் பயனையும் கூறுக.

5.4.5 - உணர்ச்சி வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உணர்ச்சி வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- உணர்ச்சியை விளக்கும் சொற்களை அறியச் செய்தல்.
- மாணவர்கள் உணர்ச்சி வாக்கியங்கள் சிலவற்றை உருவாக்கி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 33

தொகுதி 5 பண்பாடு காப்போம்

# பாடம் 1 பாரம்பரிய நடனங்கள்

கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுக.

## வாருங்கள்! வாருங்கள்!

பாரம்பரிய நடனங்களைக் கண்டுகளியுங்கள்.
பள்ளியின் கலைக்கழகம் படைக்கும் பண்பாட்டு நிகழ்ச்சியினைக் காண திரளாக வாருங்கள்.

| | |
|---|---|
| நாள்: | 20 மார்ச் 2018 |
| நேரம்: | காலை 9:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை. தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறும். |
| இடம்: | தாமான் செத்தியா, தமிழ்ப்பள்ளி மண்டபம், சிரம்பான். |
| நுழைவு: | இலவசம் |
| நோக்கம்: | பாரம்பரிய நடனங்கள், கலைகள் அனைத்தும் அழியாமல் காக்கப்படுதல் வேண்டும். |
| உடை: | பாரம்பரிய உடை. |









# நிகழ்ச்சி நிரல்

**காலை**

9:00 மணி - வருகையாளர்கள் வருகை
9:15 மணி - தமிழ்வாழ்த்துப் பாடுதல்
9:20 மணி - பரதம் (கலைக்கழக மாணவர்கள்)
9:45 மணி - ஏற்பாட்டுக் குழுத் தலைவர் உரை
10:00 மணி - தேநீர் விருந்து
10:30 மணி - மலாய் நடனம்
10:50 மணி - மயிலாட்டம்
11:00 மணி - 'காவாய்' நடனம்
11:20 மணி - சிறப்புரை

**பிற்பகல்**

1:00 மணி - மதிய உணவு

**மாலை**

3:00 மணி - பண்பாட்டுக் கண்காட்சி
6:00 மணி - நிறைவு



பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்க நாம் வேறு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

1.6.2 - எங்கு, எப்பொழுது எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.
1.6.3 - எத்தனை, எவ்வளவு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாரம்பரிய நடனங்களின் விளம்பரத்தை வாசித்து அறிதல்.
- விளம்பரத்தில் கூறப்பட்ட விவரங்களுக்கு ஏற்ப வினாக்கள் கேட்டல்.
- வினாச் சொற்களுக்கு ஏற்பக் கேள்விகளை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 34

# பாடம் 2 அக்காவின் திருமணம்

## சொற்களைச் சரியாக வாசித்திடுக.







- அக்காவின் திருமண நாள் வந்தது.
- திருமணம் பெரிய மண்டபத்தில் நடைபெற்றது.
- உறவினர்கள் அதிகமானோர் வந்திருந்தனர்.
- மணமக்கள் அழகாகக் காட்சியளித்தனர்.
- மணமக்கள் பாரம்பரிய உடையை அணிந்திருந்தனர்.
- திருமணச் சடங்குகள் இனிதே நடந்து முடிந்தன.
- வருகை புரிந்தோர் அனைவரும் மணமக்களை வாழ்த்தினர்.
- அனைவரும் வாழை இலையில் உணவு உண்டனர்.

2.2.17 - ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ணகர, நகர, னகரச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- ணகர, நகர, னகர எழுத்துச் சொற்களை மாணவர்கள் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 35-36

# பாடம் 3 மதிக்கும் பண்பு

## வாசித்து எழுதுக.



திருமதி கமாரியா என் அண்டை வீட்டில் வசிக்கிறார். அவர் தமது மகளின் திருமணத்தை விமரிசையாக நடத்தினார்.

மணமக்கள் பாரம்பரிய ஆடையை அணிந்திருந்தனர். மணமக்களின் கைவிரல்களில் மருதாணி இடப்பட்டிருந்தது. நானும் என் தோழி லீ மெய்யும் அங்குச் சென்றோம். பல்லினத்தவரும் விரும்பி உண்ணும் வகையில் அங்குப் பல வகையான உணவுகள் இருந்தன.

ஒவ்வொரு மேசையிலும் பரிமாறப்பட்ட உணவை அனைவரும் உண்டனர். கைகளைக் கழுவ மேசையின் மீது பாணிக்கம் வைக்கப்பட்டிருந்தது. என் தோழி லீ மெய் கரண்டியைப் பயன்படுத்தி உணவு உண்டாள்.

வருகை புரிந்தோர் அனைவரும் மணமக்களைப் பன்னீர் தெளித்து வாழ்த்தினர். மணமக்கள் பார்ப்பதற்கு அரசன், அரசி போல இருந்தனர். இதனால்தான் மலாய் மொழியில் 'ஒரு நாள் அரசன்' என்ற உவமையும் உண்டாயிற்றோ!

உறவினர்களும் நண்பர்களும் 'சலாம்' செய்து கலகலப்பாக உறவாடினர். நாங்களும் அப்படியே பின்பற்றினோம். எல்லாரையும் மதிக்கும் பண்பு எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

**சொல்வளம்**

- விமரிசையாக
- தெளித்து
- பாரம்பரியம்
- பண்பு
- மருதாணி

3.3.17 - ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை மாணவர்கள் வாசித்தல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள ணகர, நகர, னகரச் சொற்களை அடையாளங்காணுதல்.
- மேலும் சில சொற்களை மாணவர்கள் உருவாக்கி எழுதுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 37-38

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரை அறிக.

இவள் பெயர் தேன்மொழி. இவள் இரண்டாம் ஆண்டில் பயில்கிறாள். தேன்மொழி மிகவும் கெட்டிக்கார மாணவி. எல்லாப் பாடங்களையும் **முழு மூச்சு**டன் படிப்பாள். தேர்வில் சிறந்த புள்ளிகள் பெற்றாள். ஆசிரியர்கள் தேன்மொழியைப் பாராட்டினர். பெற்றோர் தேன்மொழிக்குப் பரிசு வாங்கித் தந்தனர்.





தேன்மொழியின் தோழி பூங்குழலி. இருவரும் ஒரே வகுப்பில் பயில்கின்றனர். தேன்மொழியைப் போல் பூங்குழலியும் படிப்பில் சிறந்தவள். இருப்பினும், எதையும் உளறிக் கொட்டிவிடும் தன்மை உடையவள். அதனால், அவளின் தோழிகளோ அவளை **ஓட்டை வாய்** என்று கூறுவர். தனது பழக்கத்தைப் பூங்குழலி உணர்ந்தாள். தன்னைத் திருத்திக் கொள்ள முயற்சி செய்தாள்.

### மரபுத்தொடரும் பொருளும்

- **முழு மூச்சு** - முழு முயற்சியுடன் /மிகத் தீவிரமாக
- **ஓட்டை வாய்** - எல்லாவற்றையும் எல்லாரிடமும் எளிதாகச் சொல்லிவிடுகின்ற இயல்பு / உளறிக் கொட்டிவிடும் நபர்.

4.6.2 - இரண்டாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- மரபுத்தொடரையும் பொருளையும் கூறச் செய்தல்.
- மரபுத்தொடருக்கு ஏற்பச் சூழல் ஒன்றனைச் சுயமாக உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 39

# பாடம் 5 இலக்கணம்

## வினாவெழுத்துகளை அறிக.

ஓ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்.
ஏ - சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.



**எடுத்துக்காட்டு:**

அதுவோ? (அது + ஓ)
அவன் செய்தது நல்லதுதானே?
(நல்லது + தான் + ஏ)





## உரையாடலை வாசித்திடுக.

### உரையாடல் 1






## உரையாடல் 2




## உரையாடல் 3




5.1.11 - வினாவெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வினா எழுத்துகளை அறிதல்.
- உரையாடலை வாசித்து அறிதல்.
- வினாச்சொற்களைப் பயன்படுத்தி வினாக்கள் கேட்டல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 40

# தொகுதி 6 குடியியல்

## பாடம் 1 நல்ல முடிவு

### தொடர்படத்தைப் பார்த்துக் கதை கூறுக.




1.8.2 - தொடர்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பார்த்து உரையாடுதல்.
- படங்களுக்கு ஏற்பக் கதையினைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 41

# பாடம் 2 குடும்ப தினம்

## சரியான உச்சரிப்புடன் வாசித்திடுக.

1. சென்ற ஆண்டு நாங்கள் அத்தையின் இல்லம் சென்றோம்.
2. நாங்கள் குடும்ப தினம் கொண்டாடினோம்.
3. நீண்ட இடைவெளிக்குப் பின் அனைவரும் ஒன்று கூடினோம்.




குடும்ப உறவுகளை வலுப்படுத்த வேறு என்ன நடவடிக்கைகளைச் செய்யலாம்?

4. சொ**ந்த** ப**ந்த**ங்கள் ஒன்று சேர்வதன் சிறப்பை அறிந்தோம்.
5. ம**ங்க**ல நிகழ்ச்சி நடைபெறுவது போல உணர்ந்து மகிழ்ந்தோம்.
6. தாத்தா ப**ஞ்ச** தந்திரக் கதைகளை எங்களுக்குக் கூறினார்.
7. கி**ண்ட**லும் கேலியும் செய்து கலகலப்பாக உரையாடினோம்.
8. சோக**ங்க**ள் இன்றி சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடினோம்.
9. குடு**ம்ப** உறுப்பினர்களுடன் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை அறிந்தோம்.



2.2.23 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசித்து இனவெழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- மாணவர்கள் குழுமுறையில் இனவெழுத்துச் சொற்றொடர்களை உருவாக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்
**உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல்
21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 42

# பாடம் 3 தன்னம்பிக்கை

## வாசித்து எழுதுக.

**ஆகஸ்டு 2**

தேசிய தினத்தை முன்னிட்டுப் போட்டி வ**ந்த**து.
எ**ங்க**ள் வகுப்பு ஆசிரியரிடம் பெயரைக் கொடுத்தேன்.
ஆசிரியர் சிறிது நேரம் யோசித்தார்.
இந்த முறையாவது வாய்ப்புக் கொடு**ங்க**ள் என்றேன்.
தாள் ஒன்றில் என் பெயரை எழுதினார்.
'என் நாடு' எ**ன்ற** தலைப்பில் பாடப் போகிறேன்.

**ஆகஸ்டு 3**

என் தோழி பாடிப் பயிற்சி செய்தாள்.
அ**ந்த**க் குரலைக் கேட்டு மெய்மறந்தேன்.
அவளின் குரலைக் கேட்ட நான் வியந்தேன்.
வெற்றி பெறுவேனா என்ற கேள்வி என்னுள் எழு**ந்த**து.
அ**ஞ்ச** வேண்டாம் எனத் தோழர்கள் கூறினர்.
சோர்ந்து இரு**ந்த** அ**ந்த** நேரம் நண்பர்களின் ஆதரவு கிடைத்தது.

**ஆகஸ்டு 4**

போட்டி நாள் வ**ந்த**து.
அ**ஞ்ச**வில்லை என்ற போதிலும் கொ**ஞ்ச**ம் பதற்றமாக இருந்தது.
வெல்வது என்பது நான் க**ண்ட** கனவாகும்.
அகன்ற மேடையில் ஏறினேன். பாடலைப் பாடினேன்.
எனது நெ**ஞ்ச**ம் படபடத்தது.
கத**ம்ப** மாலை போல சொற்களை உச்சரித்தேன்.
அர**ங்க**ம் முழுதும் கரவொலி கேட்டது.
சிற**ந்த** பாடல் எனப் பலரும் பாராட்டினர்.
இரண்டாம் நிலையில் வெ**ன்ற**தில் மகிழ்ச்சி.
நண்பர்கள் தந்த ஊக்கத்தை மறவேன்.

3.3.23 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- நாட்குறிப்பை வாசித்து இனவெழுத்துச் சொற்றொடர்களை அறிதல்.
- மாணவர்கள் குழு முறையில் மேலும் சில இனவெழுத்துச் சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் l பக்கம் : 43

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.




வேலை கிடைக்கவில்லை

வெளிநாட்டிற்குச் செல்லுதல்




வருமானத்தைச் சேமித்தல் / சிக்கனமாகச் செலவழித்தல்

செல்வந்தராய் வாழ்தல்

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.**
  கடல் கடந்து பிற நாடுகளுக்குச் சென்றாவது செல்வத்தைச் சேர்க்க வேண்டும்.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் கூறச் செய்தல்.
- மாணவர்கள் சுயமாகச் சூழல் ஒன்றனைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு  **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை  **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 44

# பாடம் 5 இலக்கணம்

## இடம் அறிக.

- பேசுவோரின் இடத்தைக் குறிப்பது இடம்.
- இடம் மூவகைப்படும்.
- அவை: தன்மை, முன்னிலை, படர்க்கை




**இடம்**

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| நான் | நீ | அவன் |
| என் | நீங்கள் | மாணவர்கள் |
| நாங்கள் | உன் | அவர்கள் |
| எங்கள் | உமது | பூனை |
| யான் | நீர் | கண்ணன் |
| யாம் | நீவிர் | |
| | உங்கள் | |

## வாசித்து அறிக.



- நான் மகிழுந்தில் சென்றேன்.
- எங்கள் பூந்தோட்டம் அழகானது.
- உன் மகள் அழகானவள்.
- உங்கள் வருகையை எதிர்பார்க்கின்றோம்.
- அஃது என் பள்ளிக்கூடம்.
- நாங்கள் சுற்றுலா சென்றோம்.
- உமது பெயரை நான் அறிவேன்.
- நீவிர் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.
- அவன் விரைவாக ஓடினான்.
- குதிரைகள் வேகமாக ஓடின.
- அஃது ஒரு பெரிய மண்டபம்.
- அவர்கள் கலகலப்பாகப் பேசினர்.
- அவை எங்கள் தோட்டத்து மலர்கள்.
- கண்ணன் புல்லாங்குழல் இசைத்தான்.
- உன் கடிதத்தைப் பெற்றேன்.
- நீர் இனி வருந்த வேண்டாம்.
- நாங்கள் சிறந்த மாணவர்கள்.
- என் நண்பன் வெளிநாடு சென்றான்.
- மான் காட்டில் துள்ளித் திரிந்தது.
- உமது படைப்பு மிகவும் அருமை.










5.3.9 - தன்மை, முன்னிலை, படர்க்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தன்மை, முன்னிலை, படர்க்கை பற்றிய விளக்கம் அளித்தல்.
- கொடுக்கப்பட்ட வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- மாணவர்களைக் குழுவாகப் பிரித்து வாக்கியங்களை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி  **உ.சி.தி:** பகுத்தாய்தல்  21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 45-47

# தொகுதி 7 கலை

## பாடம் 1 திருத்திச் சொல்லுங்கள்

### வினாக்கள் கேட்டு உரையாடுக.




1.7.4 - பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பேச்சுவழக்குச் சொற்களை வாசித்தல்.
- பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திச் சரியாகச் சொல்லப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 48

பாடம் 2

# கலைகள் கற்போம்

## வாசித்து அறிக.

**இரண்டு சொற்கள்**

| | |
|---|---|
| காற்று வீசியது | வீரர்கள் வென்றனர் |
| கிளைகள் அசைந்தன | யாழினி படிக்கிறாள் |
| பறவைகள் பறந்தன | கோமதி எழுதுகிறாள் |
| சிறுவன் அழுதான் | மீன்கள் நீந்தும் |
| பாட்டி சமைக்கிறார் | நடிகர்கள் நடித்தனர் |
| குழந்தை சிரித்தது | உழவர்கள் உழைத்தனர் |
| பூக்கள் மலர்ந்தன | அப்பா வந்தார் |
| பாடகி பாடுவாள் | தங்கை வரைகிறாள் |
| சேவல் கூவும் | ஆசிரியர் கற்பித்தார் |
| சூரியன் உதித்தது | செடிகள் வளர்ந்தன |
| நாய் குரைக்கும் | அமைச்சர் பேசினார் |
| குதிரைகள் ஓடின | அண்ணன் நடந்தான் |

2.4.3 - இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைக் கூறச் செய்தல்.
- மாணவர்கள் குழு முறையில் இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 49-50

## பாடம் 3 மேடை நாடகம்

**வாசித்து எழுதுக.**



### திணை

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| மனிதர்களையும் தேவர்களையும் குறிக்கும் | மனிதர்களையும் தேவர்களையும் தவிர்த்து மற்றவற்றைக் குறிக்கும் |
| **எடுத்துக்காட்டு:** சிறுவன், பெண்கள், மன்னன், தங்கை | **எடுத்துக்காட்டு:** மாடுகள், செடி, கணினி, குதிரை |

### உயர்திணை




| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அண்ணன் | அண்ணி |
| மகன் | மகள் |
| மாணவன் | மாணவி |
| கிழவன் | கிழவி |
| பாடகன் | பாடகி |




1. பாட்டி இசையை இரசித்தார்.
2. தம்பி திடலில் ஓடினான்.
3. மரங்கள் நிழல் தருகின்றன.
4. தங்க ஆபரணங்கள் விலை அதிகம்.
5. நடனங்கள் மேடையில் ஆடப்பட்டன.
6. பெற்றோர் கலைநிகழ்ச்சியினைக் கண்டுகளித்தனர்.
7. மாணவர்கள் சிறப்பாக நடித்தனர்.
8. பாடகர்கள் மேடைக்கு வந்தனர்.
9. கோபுரங்கள் உயரமாக இருந்தன.
10. நாற்காலிகள் வரிசையாக அடுக்கப்பட்டன.
11. செவ்வாழை பழுத்து இருந்தது.
12. தாமரை குளத்தில் இருந்தது.







3.4.3 - உயர்திணை, அஃறிணைக்கேற்ப வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உயர்திணை, அஃறிணைச் சொற்களை விளக்குதல்.
- சொற்களையும் வாக்கியங்களையும் வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் குமிழி வரைபடத்தில் உயர்திணை, அஃறிணைச் சொற்களை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 51-54

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### திருக்குறளையும் பொருளையும் அறிக.



சீலனும் சரவணனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். சீலனுக்குப் புரியாத பாடங்களைச் சரவணன் சொல்லித் தருவான். சில சமயங்களில் சரவணனின் தாயார் கொடுக்கும் உணவைச் சீலனுடன் பங்கிட்டுச் சாப்பிடுவான். தன்னைப் போலவே சீலனும் எல்லாப் பாடங்களிலும் சிறந்த புள்ளிகள் பெற வேண்டும் என நினைத்துப் பல வழிகளில் உதவி செய்தான்.



ஒரு நாள் சீலனின் கதைப் புத்தகத்தைச் சரவணன் இரவல் வாங்கிச் சென்றான். நீர்ப் புட்டிச் சாய்ந்ததால் அப்புத்தகம் நனைந்து போயிற்று. மறுநாள் சீலனிடம் சரவணன் புத்தகத்தைக் கொடுத்தான். நடந்தவற்றை விளக்கினான்; சீலனின் முகம் வாடியது. ஆனாலும், சரவணன் தனக்குச் செய்த பல உதவிகளை நினைத்தான். “பரவாயில்லை நண்பா! நீ வேண்டுமென்று செய்யவில்லையே! வருத்தப்படாதே,” என்றான் சீலன்.

### திருக்குறளும் பொருளும்

- **நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
  **அன்றே மறப்பது நன்று. (108)**
  ஒருவர் நமக்குச் செய்யும் உதவியை மறப்பது நல்லதல்ல. அவர் செய்யும் குற்றத்தை உடனே மறந்துவிடுவது நல்லது.

4.3.2 - இரண்டாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.


**ஆசிரியர் குறிப்பு**
- கதையை வாசித்து திருக்குறளையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- திருக்குறளையும் பொருளையும் அறியச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 55

# பாடம் 5 இலக்கணம்

## ஒருமை - பன்மை அறிக. (‘ல் - ற்’ ஆக மாறுதல்)




5.3.6 - ஒருமை பன்மையில் ‘ல் - ற்’ ஆக மாறும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலை வாசிக்கச் செய்தல்.
- ஒருமை பன்மையில் ‘ல் - ற்’ ஆக மாறும் சொற்களை அடையாளம் காணுதல்.
- மாணவர்களைக் குழு முறையில் வாக்கியங்கள் உருவாக்கி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 56

# தொகுதி 8 உயிரினங்களும் பொருளாதாரமும்

## பாடம் 1 எங்களின் ஒலி

### வாசித்து ஒலித்திடுக.




1.7.5 - கூவும், கொக்கரிக்கும், கீச்சிடும், கரையும், அலறும், அகவும், முரலும் ஆகிய ஒலிமரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஒலிமரபுச் சொற்களை வாசிக்கப் பணித்தல்.
- ஒலிமரபுச் சொற்களை மாணவர்கள் ஒலித்துக் காட்டப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 57

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# பாடம் 2 முன்னேற்றம்

## சரியாக வாசித்திடுக.

1


கணினித் தொழிற்சாலை


2

வளமான நாடு

3


இன்பச் சுற்றுலா

4

வணிக வளாகம்

5

ஏற்றுமதிப் பொருள்கள்

6


வருமான வரி

7


மலிவான விலை

8


பொதுநல வசதிகள்

2.2.24 - படம் தொடர்பான சொற்றொடரைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- படம் தொடர்பான சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- மாணவர்கள் வேறு சொற்றொடர்களை உருவாக்கப் பணித்தல்.
- கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்பச் சொற்றொடர்கள் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 58-60

## பாடம் 3 ஒலிகள் பலவகை

### வாக்கியங்களை வாசித்து எழுதுக.




1. குயில் இனிமையாகக் கூவும்.
2. சேவல் அதிகாலையில் கூவும்.



3. பெட்டைக் கோழி முட்டையிட்டுக் கொக்கரிக்கும்.
4. எலியின் கீச்சிடும் சத்தம் எனக்குக் கேட்டது.
5. இரையைக் கண்ட காகங்கள் கரைந்தன.
6. வண்டு முரலும் என்று ஆசிரியர் கூறினார்.



7. அகவும் தன்மை மயிலுக்கு மட்டுமே உண்டு.
8. நள்ளிரவில் ஆந்தை அலறும் சத்தம் எங்களை அச்சத்தில் ஆழ்த்தியது.
9. ஆண் மயில் கார்மேகம் கண்டு அகவும்.



10. கூண்டில் அடைக்கப்பட்ட கிளி கீச்சிட்டது.





3.4.6 - ஒலிமரபுச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாக்கியங்களை வாசித்து ஒலிமரபுச் சொற்களைக் கூறச் செய்தல்.
- ஒலிமரபுச் சொற்களைக் கொண்டு சில வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 61

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.



சுகந்தி இரண்டாம் ஆண்டில் பயில்கிறாள். அவளின் மகிழி சதுரங்கம் விளையாடுவது. அவளின் திறமையைக் கண்டு பெற்றோர் வியந்தனர்.

பள்ளியிலும் அவளின் சாதுரியமான போக்கு ஆசிரியர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மாவட்ட ரீதியிலும் மாநில ரீதியிலும் தன் பள்ளியைப் பிரதிநிதித்து சதுரங்கப் போட்டியில் கலந்து கொண்டாள். போட்டியில் வெற்றியும் பெற்றாள். சிறந்த சதுரங்க விளையாட்டாளர் என்ற புகழையும் பெற்றாள். **விளையும் பயிர் முளையிலே தெரியும்** என்பதுபோல எதிர்காலத்தில் சுகந்தி சிறந்த சதுரங்க வீராங்கனையாவாள் எனப் பலரும் பாராட்டினர்.




### சொல்வளம்

- சதுரங்கம்
- திறமை
- சாதுரியமான
- வீராங்கனை
- வியந்தனர்

### பழமொழியும் பொருளும்

- **விளையும் பயிர் முளையிலே தெரியும்.**

  ஒரு குழந்தை சிறு வயதிலே எப்படிச் செயல்படுகிறதோ அதைக் கொண்டு பிற்காலத்தில் எப்படி விளங்கும் என்பதை ஊகித்து அறியலாம்.

4.7.2 - இரண்டாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்துப் பழமொழியையும் பொருளையும் அறிந்து கூறச் செய்தல்.
- பழமொழிக்கு ஏற்பச் சூழல் ஒன்றனைச் சுயமாகக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 62

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்



# பாடம் 5 இலக்கணம்

## ஒன்றன்பால், பலவின்பால் அறிக.

**பால்**

- பால் என்பது பகுப்பு அல்லது பிரிவு எனப்படும்.
- பொருள்களை (உயர்திணை, அஃறிணை) ஐவகைப் பால்களாகப் பிரிக்கலாம்.

**அவை**


**ஒன்றன்பால்** - மரம், புலி, மயில்

**பலவின்பால்** - மரங்கள், புலிகள், மயில்கள்

**பால் வகை**


| ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|
| சிலை | சிலைகள் |
| பந்து | பந்துகள் |
| வண்டி | வண்டிகள் |
| வீடு | வீடுகள் |
| செடி | செடிகள் |
| கோழி | கோழிகள் |
| மரம் | மரங்கள் |
| மலர் | மலர்கள் |

## வாக்கியங்களை வாசித்திடுக.

1

எலி வளைக்குள் புகுந்தது.


2

பறவைகள் வானத்தில் பறந்தன.

3

குதிரை வேகமாக ஓடியது.

4

சிங்கங்கள் கூண்டில் அடைக்கப்பட்டன.

5

ஆடு புல் மேய்ந்தது.

6

பூக்கள் நறுமணம் வீசின.

7


மகிழுந்து சாலையில் சென்றது.

8

அஃது அழகிய வீடு.

5.3.4 - ஒன்றன்பால், பலவின்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களையும் வாக்கியங்களையும் பிழையற வாசிக்கச் செய்தல்.
- ஒன்றன்பால், பலவின்பால் சொற்களை வட்ட வரைபடத்தில் எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் 1 பக்கம் : 63-65


# தொகுதி ௯ அனுபவங்கள்

## பாடம் ௧ விலங்ககம் சென்றோம்

வாசித்து உரையாடுக.








1.7.6 - கர்ஜிக்கும், சீறும், கத்தும், கனைக்கும், பிளிறும், உறுமும் ஆகிய ஒலிமரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஒலிமரபுச் சொற்களை வாசித்து அறியச் செய்தல்.
- மாணவர்கள் ஒலிமரபுகளை ஒலித்துக் காட்டுதல்.
- ஒலிமரபுச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் I பக்கம் : 66

# பாடம் 2 பாட்டி சொன்ன கதை

## கதையை ஏற்ற தொனியுடன் வாசித்திடுக.

அப்பா கதைப் புத்தகம் ஒன்றை வாங்கி வந்தார். என்னிடம் முதலில் கொடுத்தார். அக்காள் அதை முதலில் படிக்க வேண்டும் என ஆவல் கொண்டாள். ஆனால், நான் தர மறுத்தேன். இருவருக்கும் வழக்கம் போல வாய்ச் சண்டை ஆரம்பமானது.

சத்தம் கேட்டுப் பாட்டி அங்கு விரைந்து வந்தார். “இங்கே வாருங்கள்,” என்று அழைத்தார். நாங்களும் பாட்டியின் அருகில் சென்றோம். எங்கள் இருவரையும் அமரச் செய்து பாட்டி கதை சொல்ல ஆரம்பித்தார். “உங்கள் இருவருக்கும் பிடித்த பூனைக் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்,” என்றார்.





இரண்டு பூனைகள் ஒரு பாலாடைக் கட்டிக்குச் சண்டை போட்டன. அவ்வழியே வந்த குரங்கு ஒன்று பூனைகளை ஏமாற்ற நினைத்தது. “என்ன நண்பர்களே! இருவருக்கும் என்ன பிரச்சினை?” என்று கேட்டது.



“இந்தப் பாலாடைக் கட்டியை எங்களுக்குள் பகிர்ந்து கொள்வது பற்றித்தான் பிரச்சினை,” என்றது ஒரு பூனை. குரங்கும், “இதோ நான் சரியாகப் பிரித்துக் கொடுக்கிறேன்,” என்றது.

பாலாடைக் கட்டியை இரண்டாக உடைத்தது. “ஐயகோ! ஒன்று பெரியதாக உள்ளதே!” என்று கூறி அதைக் கொஞ்சம் கடித்தது. “அடடே! இப்பொழுது இது பெரியதாக உள்ளதே!” என்று கூறி மற்றொன்றையும் கடித்தது.

இப்படி மாற்றி மாற்றிக் கடித்து எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்தது. “இப்பொழுது பாலாடைக் கட்டி இல்லை, உங்கள் இருவருக்கும் சண்டையும் இல்லை,” என்று கூறிவிட்டுச் சென்றது. இரு பூனைகளும் ஏமாந்து நின்றன.

“அடடே! பாட்டி, எவ்வளவு மோசமான குரங்கு அது!” என்றாள் அக்காள். “இனி நாங்கள் சண்டை போட மாட்டோம். ஒற்றுமையாக இருப்போம்,” என்றேன் நான். பாட்டி சிரித்துக் கொண்டே எங்களைத் தட்டிக் கொடுத்தார்.

**சொல்வளம்**

- ஆவல்
- பாலாடை
- பகிர்ந்து
- ஏமாந்து
- மோசமான

2.3.2 - கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கப் பணித்தல்.
- கதையைப் பாகமேற்று நடித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு  **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல்  **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் I பக்கம் : 67

# பாடம் 3 விலங்குகளின் ஒலிகள்

## வாசித்து அறிக.




1. யானை பெரிய உருவம் கொண்ட விலங்கு.
யானை பிளிறும்.



2. சிங்கம் விலங்குகளின் அரசன்.
சிங்கம் கர்ஜிக்கும்.



3. கழுதை பொதி சுமக்கும்.
கழுதை கத்திக் கொண்டே நடந்தது.



4. குதிரை வேகமாக ஓடும்.
அது கனைத்துக் கொண்டே ஓடும்.



5. புலி காட்டில் வாழும்.
புலி உறுமும் சத்தம் அச்சமூட்டும்.



6. பாம்பு புற்றில் வாழும்.
நாகப் பாம்பு படமெடுத்துச் சீறும்.



7. ஆடு சாதுவான பிராணி.
ஆடு கத்தும்.

3.4.6 - ஒலிமரபுச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஒலிமரபுச் சொற்களின் வாக்கியங்களை வாசித்தல்.
- சுயமாக வாக்கியங்களை உருவாக்கிக் கூறுதல்.
- வாக்கியங்களைக் குழு முறையில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 68

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## புதிய ஆத்திசூடியையும் பொருளையும் அறிக.



என் பெயர் திலகன். நான் தினசரி உடற்பயிற்சி செய்வேன். நான் ஓட்டப் பந்தயத்தில் சிறந்து விளங்குகிறேன். பள்ளிப்பாடத்திலும் சிறந்த புள்ளிகளைப் பெறுகிறேன். நான் சுறுசுறுப்பான மாணவன் என்று ஆசிரியர் அடிக்கடி பாராட்டுவார். சோர்வில்லாமல் துடிப்புடன் இருப்பதே எனக்குப் பிடித்திருக்கிறது.



என் பெயர் செம்மலர். நான் எல்லாரிடமும் அன்பாகப் பழகுவேன். எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கின்றனர். என் நண்பர்களுக்குப் பாடங்களில் உதவி செய்வேன். மேலும், வசதி குறைந்த நண்பர்களுக்கும் உதவுவேன். பிறருக்குக் கொடுத்து உதவுவது சிறந்த பண்பு என என் ஆசிரியர் கூறுவார்.

**சொல்வளம்**

- தினசரி
- பந்தயத்தில்
- பழகுவேன்
- வசதி
- பண்பு

### புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **இளைத்தல் இகழ்ச்சி.**
  துடிப்புடன் இல்லாது சோர்வடைந்திருப்பது இழிவாகும்.
- **ஈகை திறன்.**
  பிறருக்குக் கொடுத்து உதவும் ஆற்றலோடு விளங்க வேண்டும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப் பகுதியை வாசித்து புதிய ஆத்திசூடியையும் பொருளையும் கூறச் செய்தல்.
- சுயமாகச் சூழல் ஒன்றனைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 69

## பாடம் 5 இலக்கணம்

### உணர்ச்சிக்குறியை அறிக.


நகை, அழுகை, அச்சம், பெருமகிழ்ச்சி, கோபம், பெருமிதம் போன்ற தன்மைகளை வெளிப்படுத்தும் சொற்களுக்குப் பின் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

உணர்ச்சிக்குறிகள் வாக்கிய இறுதியிலும் அமையலாம்.

**எடுத்துக்காட்டு:**

1. ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!
2. உன்னால் முடியும் தம்பி!

### உரையாடலை வாசித்திடுக.




5.5.2 - உணர்ச்சிக்குறி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலை வாசித்து அறிதல்.
- உணர்ச்சிக்குறியை அறிந்து வாக்கியங்கள் அமைத்தல்.
- உரையாடல் ஒன்றனைக் குழுவில் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 70-71

# தொகுதி 10 வணிகவியல்

## பாடம் 1 புத்திசாலித்தனம்

### படங்களைப் பார்த்துக் கதை கூறுக.



சிறுவன் - கடைத்தெரு வழி - மிட்டாய்களை உற்றுப் பார்த்தான்



கடைக்காரன் பணம் கேட்டான்- சிறுவன் அதிர்ந்தான் - யோசித்தான்



சட்டைப்பை - சில்லறைக் காசு - குலுங்கச் செய்தான்



பார்த்ததற்கு - சில்லறைக் காசுகளின் ஒலியைக் கேட்டதற்கு - சரியாகிப் போனது - கடைக்காரன் - வெட்கித் தலைகுனிந்தான்

1.8.2 - தொடர்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- தொடர்படங்களின் துணையுடன் முழுக் கதையைக் கூறுதல்.
- கதையைப் பாகம் ஏற்று நடித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 72

# பாடம் 2 தீபாவளிச் சந்தை

## வாக்கியங்களை வாசித்திடுக.






1. தீபாவளிச் சந்தைக்குச் சென்றோம்.
2. பலவிதப் பொருள்களைப் பார்த்தோம்.
3. மக்கள் பொருள்களை வாங்கினர்.
4. அலங்காரப் பொருள்களைக் கண்டோம்.
5. வண்ண விளக்குகள் கவர்ந்தன.
6. வியாபாரிகள் கலகலப்பாகப் பேசினர்.
7. அம்மா பலகாரங்கள் வாங்கினார்.
8. அண்ணன் மத்தாப்பு வாங்கினார்.
9. தம்பி புத்தாடை கேட்டான்.
10. இனிப்புப் பலகாரங்களைச் சுவைத்தோம்.
11. நிறைய கடைகள் இருந்தன.
12. அத்தை முறுக்கு வாங்கினார்.

2.4.4 - மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- படச் சூழலுக்கு ஏற்ப மாணவர்கள் வேறு வாக்கியங்களைக் கூறப் பணித்தல்.
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 73-74

# பாடம் 3 நாமும் அறிவோம்

## குறில், நெடில் சொற்களை வாசித்து எழுதுக.

**தாடி** வைத்த தாத்தா
**தடி** ஊன்றி நடந்தார்.



**பலம்** கொண்ட வீரன்
**பாலம்** கடந்து சென்றான்.



**மலை** ஏறிய சிறுவன்
**மாலை**யில் வீடு திரும்பினான்.



**பட்டு** வேட்டி மாமா
**பாட்டு** ஒன்று பாடினார்.



**வலை**யை இழுத்த வலைஞனைப் பார்த்து
**வாலை** ஆட்டியது நாய்க்குட்டி.



**தடை**யைத் தாண்டிய சிறுவனுக்குத்
**தாடை**யில் காயம் பட்டது.



**குடை** பிடித்தாள் தங்கை
**கூடை** சுமந்தாள் நங்கை.



**முட்டை**களை வாங்கிய வளவன்
**மூட்டை** ஒன்றைச் சுமந்தான்.



3.4.7 - குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- குறில், நெடில் சொற்களை வாசித்தல்.
- குறில், நெடில் சொற்களில் வாக்கியங்களை அமைத்து எழுதுதல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 75-76

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

பாடம் 4 

# செய்யுளும் மொழியணியும்

## இணைமொழியையும் பொருளையும் அறிக.

வழக்கம்போல் தாத்தா அன்றும் மகாபாரதக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.



அர்ஜுனனின் மனைவி சுபத்திரை. ஒரு நாள் அர்ஜுனன், கருவுற்றிருந்த மனைவி சுபத்திரையிடம் போர்க்களத்தில் எதிரிகள் பற்றி விளக்கிக் கொண்டிருந்தான். எதிரிகளைத் திறமையாக வெல்லும் யுக்திகளையும் பத்மவியூகம் எனும் முறையைப் பற்றியும் கூறினான்.

சுபத்திரை கர்ப்பக் காலத்தில் **அல்லும் பகலும்** துணிவோடு போர் புரியும் பயிற்சியில் ஈடுபாடு கொண்டிருந்தாள். அர்ஜுனன் அவ்வப்போது கூறும் வீரதீரக் கதைகளைக் கேட்பதைத் **தாயும் சேயும்** மகிழ்வாகக் கொண்டிருந்தனர்.

சுபத்திரைக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு அபிமன்யு எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அபிமன்யு சிறுவனாக இருக்கும்போதே தாய் சுபத்திரை வில்வித்தையைக் கற்பித்தாள்.

வில்வித்தையில் சிறந்து விளங்கிய அவனுக்கு எக்காரியத்திலும் **நன்மை தீமை** ஆராய்ந்து செயல்படவும் துணைபுரிந்தாள்.

அபிமன்யு தன் தந்தை அர்ஜுனன் போலவே வில் வித்தையில் சிறந்து விளங்கினான். பாண்டவர்களின் செல்லப் பிள்ளையாகவும் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தான்.



### சொல்வளம்

- போர்க்களம்
- வில்வித்தை
- திறமை
- வீரதீர
- எதிரிகள்

### இணைமொழியும் பொருளும்

- **தாயும் சேயும்** - தாயும் குழந்தையும்
- **அல்லும் பகலும்** - இரவும் பகலும்/எப்பொழுதும்
- **நன்மை தீமை** - நல்லது கெட்டது

4.4.2 - இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுதல்.
- குழுமுறையில் வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 77

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சிந்தனை வியூகம் 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## பாடம் 5 இலக்கணம்

### காலங்கள் அறிக.

காலங்கள் மூன்று வகைப்படும்.

| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|



**இறந்த காலம்**

ஒரு செயல் அல்லது தொழில் நடந்து முடிந்துவிட்டதைக் காட்டுவது.

**எடுத்துக்காட்டு:**
பாடினான், நடந்தன, கேட்டாள், ஆடினர், சென்றது.



**நிகழ்காலம்**

ஒரு செயல் அல்லது தொழில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டுவது.

**எடுத்துக்காட்டு:**
பாடுகிறான், நடக்கின்றன, கேட்கிறாள், ஆடுகின்றனர், செல்கிறது.



**எதிர்காலம்**

ஒரு செயல் அல்லது தொழில் நடைபெறவிருப்பதைக் காட்டுவது.


**எடுத்துக்காட்டு:**
பாடுவான், நடக்கும், கேட்பாள், ஆடுவர், செல்லும்.

## வாசித்திடுக.










5.3.7 - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- காலங்கள் பற்றிய விளக்கத்தை வாசித்தல்.
- சொற்களையும் வாக்கியங்களையும் வாசிக்கச் செய்தல்.
- மூன்று காலங்களிலும் மாணவர்கள் வாக்கியங்கள் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 78-80

# தொகுதி 11 போதைப் பொருள்

## பாடம் 1 புரிந்து நடந்திடு

### வாசித்து உரையாடுக.

பள்ளிக்கு நிதமும் சென்றிடுவாய் - நல்ல
நூல்களைக் கற்றுத் தேர்ந்திடுவாய்
ஆசான் சொல்லை மதித்திடுவாய் - நீ
நானிலம் போற்றிட உயர்ந்திடுவாய்

நல்லவர் நட்பை நாடிடுவாய் - உன்
நண்பரின் பிழைகளைப் பொறுத்திடுவாய்
நல்லுரை கேட்டுத் தெளிந்திடுவாய் - நீ
பண்புள்ள மாந்தனாய் விளங்கிடுவாய்

தீயவர் நட்பை விலக்கிடுவாய் - என்றும்
தீயச் செயலைத் தவிர்த்திடுவாய்
போதை மருந்தை வெறுத்திடுவாய் - அது
தீமை என்று உரைத்திடுவாய்

- வீ. சந்திரன்




1.4.2 - செவிமடுத்த கவிதையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையைத் தக்க தொனியுடன் வாசித்தல்.
- கவிதை வரிகளின் பொருளை விளக்குதல்.
- கவிதையில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கூறிக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 81

# பாடம் 2 கண்காட்சி

## வாசித்து அறிக.

1




பள்ளிப் பேருந்தில் நாங்கள் ஏறினோம். கண்காட்சி அரங்கத்திற்குச் சென்றோம்.

2





மக்கள் கூட்டம் நிரம்பி இருந்தது. வரிசையாக நின்று உள்ளே சென்றோம்.

3




சுகாதார அதிகாரி எங்களுக்குச் சிறப்பான விளக்கம் அளித்தார். போதைப் பொருளின் விளைவுகளைப் பற்றி அறிந்துகொண்டோம்.

4



அஃது உயிர்க்கொல்லிப் பொருள் என உணர்ந்து கொண்டோம். அதனை விலக்கி வாழ உறுதி கொண்டோம்.

2.2.19 - குற்றெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- குற்றெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களை வாசித்தல்.
- குற்றெழுத்துச் சொற்றொடர்களை மாணவர்கள் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 82

## கவிதையைப் பாடி மகிழ்க.



யானை வந்தது தெருவில்
யானை வந்தது!
காண வந்த சிறுவர் நடுங்க
யானை வந்தது!
தூணைப் போன்ற கால்களோடு
யானை வந்தது!
வாலை ஆட்டி இங்கும் அங்கும்
யானை வந்தது!
மீனைப் போன்ற கண்களோடு
யானை வந்தது!
காதுகளை விசிறிக்கொண்டு
யானை வந்தது!
மேனி குலுங்க பெரிய உருவம்
நடந்து வந்தது!
பானை வயிறு கொண்ட யானை
பாங்காய் வந்தது!

- குழந்தை கவிதைகள்

2.2.20 - நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை நயமுடன் பாடுதல்.
- கவிதையில் உள்ள நெட்டெழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறியச் செய்தல்.
- மேலும், சில நெட்டெழுத்துச் சொற்றொடர்களை எழுதிப் பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 83

# பாடம் 3 போதையை ஒழிப்போம்

## வாசித்து எழுதுக.




3.3.19 - குற்றெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.
3.3.20 - நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

• பதாகையில் உள்ள தகவலைப் பற்றிக் கலந்துரையாடுதல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 84

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## வாசித்து எழுதுக.

| | |
|---|---|
| கடல் காற்று | கடலை மிட்டாய் |
| காகிதக் கப்பல் | காவடி ஆட்டம் |
| தென்னை மரம் | துண்டுத் துணி |
| தேன் கூடு | தூண்டில் முள் |
| நிலா ஒளி | மஞ்சள் நிறம் |
| நீச்சல் குளம் | மாலை நேரம் |
| முரட்டுப் பையன் | சிறிய பட்டம் |
| மூங்கில் காடு | சீனிப் பாகு |
| மொட்டைத் தலை | வெள்ளிக் கிண்ணம் |
| மோதிர விரல் | வேலிக் கம்பி |
| சுண்டு விரல் | வண்டிச் சக்கரம் |
| சூரிய உதயம் | வாண வேடிக்கை |
| நுனிப் புல் | சந்தன மாலை |
| நூல் கண்டு | சாந்துப் பொட்டு |

3.3.19 - குற்றெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.
3.3.20 - நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பதாகையில் உள்ள தகவல்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- குற்றெழுத்துச் சொற்றொடர்களையும் நெட்டெழுத்துச் சொற்றொடர்களையும் வாசிக்கப் பணித்தல்.
- சொற்றொடர்களை அழகிய கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 84

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.




### திருக்குறளும் பொருளும்

- **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (393)**

கற்றவர்கள் கண்ணுள்ளவர்கள் எனச் சொல்லத் தகுதியுடையவர்கள். கல்லாதவர்கள் முகத்தில் இருப்பது புண்கள் எனக் கருதப்படுகின்றன.

4.3.2 - இரண்டாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.


**ஆசிரியர் குறிப்பு**
- படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- திருக்குறளையும் பொருளையும் வாசித்து அறிதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 85

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# பாடம் 5 இலக்கணம்

## இலக்கணம் அறிக.





ஒரு - ஓர் என்பன பெரும்பாலும் வேறுபாடு இல்லாமலேயே மக்களால் வழங்கப்படுகின்றன. எனினும், அவற்றை இடமறிந்து வழங்குதல் வேண்டும்.




**உயிர்மெய்யெழுத்தை** முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எடுத்துக்காட்டு:**
ஒரு **க**தவு
ஒரு **மா**லை
ஒரு **ச**ட்டி




**உயிர் எழுத்தை** முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

**எடுத்துக்காட்டு:**
ஓர் **அ**ணில்
ஓர் **ஆ**டு
ஓர் **ஓ**டம்

5.3.8 - ஒரு, ஓர் /அது, அ∴து / இது, இ∴து /தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- ஒரு, ஓர் என்ற இலக்கண விதியை விளக்குதல்.
- சொற்களை வாசித்து அறிதல்.
- ஒரு, ஓர் எனும் இலக்கண மரபை ஏற்று வரும் சொற்களைக் குமிழி வரைபடத்தில் எழுதிக் காட்டுதல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் I பக்கம் : 86-87

## வாசித்திடுக.

**ஓர்** ஊரின் எல்லையில் பசுமையான காடு ஒன்று இருந்தது.






5.3.8 - ஒரு, ஓர் / அது, அ.்.து / இது, இ.்.து / தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை ஏற்ற தொனியோடு வாசித்தல்.
- ஒரு, ஓர் பயன்பாட்டினைக் கண்டறிதல்.
- ஒரு, ஓர் பயன்படுத்திச் சில வாக்கியங்களை எழுதிப் பட்டியலிடுதல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 86-87

# தொகுதி 12 சமூகம்

## பாடம் 1 ஒருமைப்பாடு

### தொடர்படத்தைப் பார்த்துக் கதை கூறுக.




1.8.2 - தொடர்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதை கூறுதல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 88

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

## பாடம் 2 பசுமைத் திட்டம்

### வாசித்து அறிக.

வேலை முடிந்து அப்பா வீடு திரும்பினார். அவரின் முகத்தில் ஒரே மகிழ்ச்சி. எங்கள் அனைவரையும் அருகில் அழைத்தார். "நமது புதிய வீட்டிற்கான சாவி கிடைத்து விட்டது," என்றார். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டிற்குச் செல்வதை நினைத்து ஆனந்தம் கொண்டோம்.

எங்களின் புதிய வீடு இரட்டை மாடி வீடு. அந்தக் குடியிருப்புப் பகுதியில் பல இனத்தாரும் வசித்தனர். புதிய வீட்டில் நாங்கள் குடியேறினோம். அம்மா காய்கறி பயிரிடுவதைப் பற்றி யோசித்தார்.

சிறு வயதிலிருந்தே அம்மாவுக்கு ஓர் ஆசை. ஆம்! நவீன முறையிலான நீர்ப்பயிரியல் (hydroponic) வழி காய்கறித் தோட்டம் போடுவதுதான் அவரின் ஆசை. இணையத்தின்வழி அதற்குரிய விவரங்களை அம்மா சேகரித்தார்.

அதன்படி எங்கள் வீட்டின் மேல் பகுதியில் காய்கறிகளை பயிரிட ஆரம்பித்தோம். இராசாயனக் கலவை இல்லாமல் நவீன முறையில் காய்கறிச் செடிகளைப் பயிர் செய்தோம். செடிகள் செழித்து வளர ஆரம்பித்தன. இதைப் பார்த்த அண்டை வீட்டுக்காரர்கள் அதிசயித்தனர்.



அம்மா செய்த முயற்சிக்குப் பலரும் பாராட்டு தெரிவித்தனர். தங்களுக்கும் அம்முறையைச் சொல்லித்தர வேண்டி என் அம்மாவை நாடினர். அம்மாவும் தயங்காமல் தமக்குத் தெரிந்த விவரங்களைப் பகிர்ந்து கொண்டார். நாளடைவில் பலரும் தங்கள் வீட்டு மாடியில் காய்கறிகளைப் பயிரிட்டனர். காய்கறிகளை விற்று வருமானத்தை ஈட்டியதோடு அவற்றைச் சமைத்தும் உண்டனர்.



2.3.2 - கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்தல்.
- கதையில் கூறப்பட்ட விவரங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கதை தொடர்பான வாய்மொழிக் கேள்விகள் கேட்டு உரையாடுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் I பக்கம் : 89

# பாடம் 3 திருமண வைபவம்

## வாசித்து எழுதுக.



- திருமண விழா.
- இஃது ஒரு திருமண விழா.
- இது பாஜாவ் இனத்தின் திருமண விழா.
- இத்திருமண விழா விமரிசையாக நடந்தேறியது.
- விமரிசையாக நடந்த இத்திருமண விழாவில் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

- கூட்டுப்பணி.
- இஃது ஒரு கூட்டுப்பணி.
- இது பொதுமக்கள் கலந்துகொண்ட கூட்டுப்பணி.
- பொதுமக்கள் கலந்துகொண்ட இக்கூட்டுப்பணி சிறப்பாக நடந்தேறியது.






- பொது மண்டபம்.
- இஃது ஒரு பொதுமண்டபம்.
- இது பெரிய பொதுமண்டபம்.
- இஃது எங்கள் வசிப்பிடத்தில் உள்ள பெரிய பொதுமண்டபம்.

3.4.4 - சொல்லை விரிவுபடுத்தி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாக்கியங்களை வாசித்து கொடுக்கப்பட்ட கருத்துகளை ஒட்டிக் கலந்துரையாடுதல்.
- சொல்லை விரிவுபடுத்தும் பயிற்சியைக் குழு முறையில் அளித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : ௧0

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.




“இதோ! கைச் செலவுக்கான பணம்,” என்றார் அப்பா.



இதில் பாதியை மட்டும் செலவு செய்துவிட்டு மீதியைச் சேமிக்க வேண்டும்.



சிறுகச் சிறுகச் சேர்த்தால் ஒரு நாளில் பெரிய தொகையாகும்.




என் ஆசைப்படி நான் சேமித்த பணத்தைக் கொண்டு ஒரு மடிக்கணினி வாங்க இயலுமே.

### பழமொழியும் பொருளும்

- **சிறு துளி பெரு வெள்ளம்**
  சிறுகச் சிறுகச் சேர்க்கின்ற ஒன்றே நாளடைவில் பேரளவாகப் பெருகிவிடும்

4.7.2 - இரண்டாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கதையை வாசித்து பழமொழியையும் பொருளையும் அறிதல்.
- கதையைப் பாகம் ஏற்று நடித்துக் காட்டுதல்.
- சேமிப்பின் நன்மைகளைப் பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 91


பாடம் 5

# இலக்கணம்

## அது, அஃது அறிக.


**அது**

**உயிர்மெய் எழுத்தைக்** கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.




**அஃது**

**உயிர் எழுத்தைக்** கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.



## வாசித்து அறிக.




5.3.8 - ஒரு, ஓர் / அது, அஃது / இது, இஃது / தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- அது, அஃது பயன்பாட்டினை வாசித்து அறிதல்.
- சொற்களை வாசித்து அறிதல்.
- மாணவர்கள் குழு முறையில் பொருத்தமான வரைபடத்தில் சொற்களை எழுதிக் காட்டப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 72

# தொகுதி 13 பாரம்பரிய விளையாட்டு

## பாடம் 1 விளையாடிப் பார்ப்போம்

### விளையாடி மகிழ்க.




குலை குலையாய் முந்திரிக்காய்
நரியே நரியே சுத்தி வா
கொள்ளையடிச்சவன் எங்கிருக்கான்
கூட்டத்திலிருக்கான் கண்டுபிடி

1.3.2 - செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- விளையாட்டினையும் அதன் முறையையும் மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- விளையாட்டினைக் குழுவில் விளையாடி மகிழ்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 1

# பாடம் 2 தமிழர் விளையாட்டு

## வாசித்து அறிக.


பரமபதம்

இது பரமபதம் எனப்படும் விளையாட்டு. இது சிறுவர்களின் மகிழ்க்கு ஏற்ற விளையாட்டு. சிறுவர்கள் இதனை ஊக்கத்துடன் விளையாடுவர். பெரியோரும் தங்களின் பொழுதைப் போக்க இதனை விளையாடுவது வழக்கம். தாயக்கட்டையை உருட்டி விளையாட்டை ஆரம்பிப்பர். விழும் எண்ணிக்கைக்கு ஏற்ப காயை நகர்த்த வேண்டும். ஏணியின் அடியில் காய் இருந்தால் உச்சியில் உள்ள கட்டத்திற்குச் செல்லலாம். பாம்பின் வாய்க் கட்டத்தில் எண் விழுந்தால் வால் பகுதிக்கு இறங்க வேண்டும். உச்சத்தில் உள்ள எண் கட்டத்திற்கு முதலில் செல்பவரே வெற்றியாளர்.

உறியடித்தல் ஒரு பாரம்பரிய விளையாட்டு. இரு நீண்ட பிரம்புகளை ஊன்றுவார்கள். நடுவில் மண் பானை தொங்கவிடப்பட்டிருக்கும். பானையில் ஒரு கயிறும் கட்டப்பட்டிருக்கும். கண்கள் கட்டப்பட்ட ஒருவர் பானையை அடித்து உடைக்க முடியாதபடி மற்றவர் தடுப்பது வழக்கம். ஆனாலும், பலமுறை முயற்சி செய்து அச்சமின்றி உறியை அடிப்பதை இன்றும் காணலாம்.


உறியடித்தல்

2.2.21 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்து இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களை அடையாளம் காணுதல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களை மாணவர்கள் உருவாக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 2-3

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** மதிப்பிடுதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# பாடம் 3 கபடி ஆடுவோம்

## ஏற்ற தொனியுடன் வாசித்து எழுதுக.

அன்பான நேயர்களே! கபடிப் பிரியர்களே!

வானொலி மூன்றிலிருந்து உங்கள் உற்ற நண்பன் அற்புதன் பேசுகின்றேன். உங்களை இப்பொழுது தேசிய அரங்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன். இதோ! உச்சக்கட்டப் போட்டிக்கு நமது நாட்டின் கபடி வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

கபடி, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு. இன்று உலகெங்கும் கபடி ஆடுகிறார்கள். அதன் தோற்றம் தமிழகம் என்பது நம் அனைவருக்கும் பெருமை தரக்கூடிய செய்தியாகும்.

**சொல்வளம்**

- அரங்கம்
- எதிரணி
- பாரம்பரியம்
- ஆரவாரம்
- சைகை



இதோ! கபடிப் போட்டி ஆரம்பமாகிவி**ட்ட**து. நடுவர் ஊதல் ஊதி, ஆட்டத்தைத் தொடக்கி வைக்கிறார். அதோ! நம் நாட்டு வீரர் தமிழ்மாறன் எதிர்த்தரப்பை நோக்கிச் செல்கிறார். அவர் கபடி... கபடி... என்று உ**ச்ச**ரித்துக் கொண்டே முன்னேறிச் செல்கிறார். நேயர்களே! ம**க்க**ள் கூ**ட்ட**ம் அரங்கத்தில் நிரம்பி உள்ளது. இதோ! இதோ! நம் நாட்டு வீரர் எதிர்த்தரப்பினரில் இருவரைத் தொட்டுவிட்டு வேகமாக எல்லைக் கோட்டைத் தொடுகிறார். ம**க்க**ள் ஆரவாரம் செய்கின்றனர். அவர் தொ**ட்ட** இருவரையும் நடுவர் வெளியேறும்படி சைகை செய்கின்றார்.

இதோ! எதிர் அணியின் வீரர் நம் அணியை நோக்கி வருகின்றார். ஓ! அருமையாக நமது வீரர்கள் அவரைக் கிடுக்கிப்பிடி போட்டுள்ளார்கள். அவரால் த**ப்ப** முடியவில்லை. நமது அணிக்கு மீண்டும் ஒரு புள்ளி கிடைத்துள்ளது.



ஆ**ட்ட**த்தைப் பார்க்கையில் இன்றைய கபடிப் போட்டியில் நம் நாட்டுக்கு வெற்றி நி**ச்ச**யம் எனத் தோன்றுகிறது. சிறிய இடைவேளைக்குப் பிறகு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன். நன்றி.

3.3.21 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நேரடி வருணனைப் பகுதியை வாசித்தல்.
- மாணவர்கள், இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- நேரடி வருணனை செய்வது போல மாணவர்கள் பாகம் ஏற்று வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 4

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.



காவியன் விளையாடிவிட்டு வீடு திரும்பினான். அவசர அவசரமாக வீட்டினுள் நுழைந்தான். சமையல் அறைக்குச் சென்றான். குளிர்சாதனப் பெட்டியில் இருந்த நீரைக் கடகடவெனக் குடித்தான். எதைச் செய்தாலும் **அவசரக் குடுக்கை** போல அவசரப்பட்டுச் செய்யும் பேரனைத் தாத்தா அழைத்தார்.

"நாம் வெளியில் சென்று உடல் வியர்த்து வீட்டினுள் நுழைந்த உடனேயே தண்ணீர் குடிக்கக்கூடாது. குளிர்ந்த நீரைக் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்," என்றார்.

பேரனும் வழக்கம் போல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான். "ஏன் தாத்தா வெளியில் சென்று விட்டு வந்ததும் தண்ணீர் குடிக்கக்கூடாது என்று சொன்னீர்கள்?" என்றான். தாத்தாவும் விளக்கம் கொடுத்தார்.

"வெளியில் இருக்கும் காற்றழுத்தம், சுற்றுச்சூழல், வெப்பம் ஆகியவை வீட்டினுள் இருக்காது. வீட்டினுள் நுழைந்தவுடன் சுற்றுச்சூழல் மாற்றத்தை நம் உடல் ஏற்றுக் கொள்ள சிறிது நேரமாகும். எனவே, சிறிதுநேரம் கழித்து நம் உடல் பக்குவப்பட்டதும் தண்ணீரைக் குடிப்பது நல்லது," என்றார். "எனக்குத் **தெள்ளத் தெளிவாக** விளக்கம் தந்ததற்கு நன்றி தாத்தா," என்றான் பேரன்.

#### மரபுத்தொடரும் பொருளும்

- **அவசரக் குடுக்கை** - ஒரு செயலை அவசரப்பட்டுச் செய்துவிடுபவர்.
- **தெள்ளத் தெளிதல்** - அதிகம் தெளிவாகுதல்

4.6.2 - இரண்டாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- மரபுத்தொடரையும் பொருளையும் அறிதல்.
- மரபுத்தொடர்களுக்கு ஏற்ப வாக்கியங்கள் அமைக்கத் துணை புரிதல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 5

# பாடம் 5 இலக்கணம்

## உணர்ச்சிக்குறி ( ! ) அறிக.






5.5.2 - உணர்ச்சிக்குறி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கதையை ஏற்ற தொனியுடன் வாசித்தல்.
- கதையைப் போலித்தம் செய்தல்.
- உணர்ச்சிக்குறி அறிந்து சரியாக உச்சரிக்கப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 6

## விளையாட்டின் விதிமுறைகள்

இவ்விளையாட்டினை 2 முதல் 4 பேர் வரை விளையாடலாம்.

- தாயக் கட்டையை உருட்டி ஆரம்பிக்க வேண்டும்.
- கட்டத்தில் உள்ள பிராணிகளின் ஒலிமரபைக் கூற வேண்டும்.
- முதலில் வெற்றிக் கட்டத்தை அடைபவரே வெற்றியாளர்.






**ஆசிரியர் குறிப்பு**

- உயிரினங்களின் ஒலிமரபை மாணவர்கள் ஒலிக்கச் செய்தல்.
- மாணவர்கள் விளையாட்டின் விதிமுறைகளைப் பின்பற்றி விளையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# தொகுதி 14 உணவு

## பாடம் 1 வல்லவன் நான்

### நயமுடன் வாசித்திடுக.



பந்தலிலே தொங்குது
பாம்பு போல இருக்குது!

பச்சைப் பசேல் காய் இது
பார்க்க அழகாய் உள்ளது!

வெள்ளைப் பூவும் பூக்குது
படரும் தாவரக் கொடியிது!

சத்து உள்ள காய் இது
சாப்பிடத்தான் ஏற்றது!

கூட்டு வைத்து உண்ணலாம்
பொரியலாகத் தின்னலாம்!

எளிமையான காய் இது
எல்லாரும்தான் உண்பது!

சின்னஞ்சிறிய விதையிலே
நிறையக் காய்கள்
காய்க்குமே!

- குழந்தை கவிதைகள்

**காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.**

1.4.2 - செவிமடுத்த கவிதையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை ஏற்ற தொனியுடன் வாசித்தல்.
- கவிதையில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கூறச் செய்தல்.
- கவிதையை அழகிய கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 7


பாடம் 2 **காய்கள்**

## வாசித்து அறிக.



அவரை


நான் ந**ல்ல** உ**ள்ள**ம் கொண்டவன். நோய் எதிர்ப்புச் சக்தி உ**ள்ள**வன். எ**ண்ண**ற்ற சத்துகள் என்னுள் உள்ளன. இரும்புச் சத்துக்கு நான் வ**ல்ல**வனுக்கு வ**ல்ல**வன்.





பாகற்காய்


நான் வெ**ல்ல**க் கட்டிய**ல்ல** இனிப்பதற்கு. நான் சின்னஞ் சிறியவன்! கசப்புச் சுவையில் நான் சிறந்த ம**ன்ன**ன். மருத்துவக் குணங்கள் அ**ள்ள**க் குறையாதவன்.





வாழைப்பூ

சிவப்பு வ**ண்ண**ம் கொண்டவன். உடலில் உ**ள்ள** எ**ண்ண**ற்ற நோய்களைத் தீர்ப்பவன். ஆனாலும், பலர் என்னை நினைப்பதே இல்லை என்பது என் உ**ள்ள**க் குமுறல். புத்துணர்வு கொடுப்பதில் நான் ஒரு செ**ல்ல**க் குழந்தை.



2.2.22 - ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாசிப்புப் பகுதியை வாசித்து இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- இரட்டிப்பு எழுத்தில் மேலும் சொற்றொடர்களை மாணவர்கள் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 8

# பாடம் 3 சொற்புதையல் தேடு

## சொற்றொடர்களைக் கண்டறிக.




3.3.22 - ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- எழுத்துக் கட்டத்தில் உள்ள இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- கண்டறிந்த சொற்றொடர்களைப் பட்டியல் இடுதல்.
- குழுமுறையில் இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர் எழுதும் மொழி விளையாட்டை விளையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 9

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறிக.

1 என் அன்புத் தங்கை ஐந்து மாதக் குழந்தை. தங்கையின் பெயர் மணிமொழி. தங்கைக்குப் பசி எடுத்தால் அழ ஆரம்பித்துவிடுவாள். நான் அவளுக்குப் பிடித்த கிலுகிலுப்பை எடுத்து ஒலிக்கச் செய்வேன். **கிலுகிலு** எனும் ஓசையைக் கேட்டவுடன் என் தங்கை அழுகையை நிறுத்திவிடுவாள்.



2



தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பது என் பாட்டியின் மகிழியாகும். சில நகைச்சுவை வசனங்களைக் கேட்டுக் **கலகல**வெனச் சிரிப்பார். குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் பாட்டியைப் பார்த்து நானும் சிரித்துவிடுவேன்.

3 தாத்தாவின் வீட்டின் பின்புறம் ஓர் ஆறு உள்ளது. ஆற்றின் இருபுறமும் பழ மரங்கள் உள்ளன. அங்குள்ள இயற்கைக் காட்சிகள் எனக்கு மிகவும் பிடிக்கும். **சலசல**வென ஓடும் ஆற்று நீரின் ஓசை என் மனத்தை வெகுவாகக் கவர்ந்த ஒன்றாகும்.



### இரட்டைக்கிளவிகளும் பொருளும்

- **கிலுகிலு** - சிறு சிறு மணிகள் ஒன்றோடொன்று மோதும்போது உண்டாகும் ஒலி.
- **கலகல** - வாய்விட்டுச் சிரிக்கும் ஒலி.
- **சலசல** - நீர் ஓடும் ஓசை.

4.5.2 - இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறிந்து கூறச் செய்தல்.
- இரட்டைக்கிளவிகளுக்கு ஏற்ப வேறு கதையைக் குழு முறையில் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 10


## பாடம் 5 இலக்கணம்

### இது, இ∴து அறிக.

இது - உயிர்மெய் எழுத்தைக்கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.




இ∴து - உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.




### வாசித்து அறிக.




5.3.8 - ஒரு, ஓர் / அது, அ∴து / இது, இ∴து / தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- இது, இ∴து விதிமுறையை விளக்குதல்.
- சொற்களை வாசித்து அறிதல்.
- சிந்தனை வரைபடத்தில் சில சொற்களை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 11

# தொகுதி 15 பாதுகாப்பு

## பாடம் 1 எங்கும் பாதுகாப்பு

### நிரல்படுத்தி உரையாடுக.

திரு. செந்தில் தமது உந்துருளியில் தினமும் அலுவலகத்திற்குச் செல்வார். அவர் செய்ய வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை நிரல்படுத்தி உரையாடுக.




- உந்துருளியை அதற்குரிய செலுத்தும் சாலைப் பகுதியில் செலுத்துதல்.
- வாகனங்களுக்கு மிக அருகில் செல்வதைத் தவிர்த்தல்.
- அலுவலகத்தின் நுழைவாயிலில் உந்துருளியின் வேகத்தைக் குறைத்தல்.
- உந்துருளியைப் பாதுகாப்பாகப் பூட்டி வைத்தல்.
- உந்துருளியின் பாகங்களைப் பரிசோதித்தல்.
- தலைக்கவசத்தை முறையாக அணிதல்.
- உந்துருளிகளை நிறுத்துமிடத்தில் நிறுத்துதல்.

1.3.2 - செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசித்து நிரல்படுத்திக் கூறுதல்.
- பாதுகாப்பு பற்றி உரையாடுதல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 12

## பாடம் 2 நல்ல படிப்பினை

### கதையை வாசித்திடுக.

“குமரா! அப்பாவின் கையைப் பிடித்துக் கொள். இங்கும் அங்கும் வேடிக்கை பார்த்துக்கொண்டே தனியாக நடக்காதே!” என்று தன் தாயின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் குமரன். பொது விடுமுறை நாளான அன்று தன் பெற்றோருடன் பேரங்காடிக்குச் செல்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டான் அவன்.




“மக்கள் கூட்டம் நிறைந்த இடங்களில் சிறுவர்கள் மிக எளிதில் காணாமல் போய்விடுவர். அச்சமயம் பெற்றோருக்குப் பதற்றமும் பயமும் ஏற்படும் குமரா,” தொடர்ந்தார் அப்பா.

ஐந்தாவது மாடியில் இருக்கும் பேரங்காடிக்குச் செல்ல மின்தூக்கி இருக்கும் இடத்தை நெருங்கினர். அங்கே சிலர் ஏதோ பதற்றத்தில் பேசிக் கொள்வதைக் கண்டனர். ஒரு மாது அழுது புலம்பிக் கொண்டிருப்பதையும் பார்த்தனர். விசாரித்ததில் மாதின் மகள் மின்தூக்கியின் கதவு திறந்தவுடன் தனியாக ஓடிச் சென்று உள்ளே நுழைந்துவிட்டாள். அவளின் தாய் வருவதற்குள் மின்தூக்கியின் கதவு மூடிக் கொண்டது.




“பார்த்தாயா குமரா! இப்போது புரிகின்றதா உனக்கு!” என்றார் அப்பா. சற்று நேரத்தில் அந்தச் சிறுமியை அழைத்து வந்தார் காவலாளி. தாயைக் கண்ட சிறுமியின் முகத்தில் ஆனந்தச் சிரிப்பு. மகளைத் தூக்கி அணைத்துக் கொஞ்சும் மொழியில் அறிவுரை கூறுவதைப் பார்த்த குமரன் புன்னகைத்தான்.

### சொல்வளம்

- பேரங்காடி
- மின்தூக்கி
- வாய்ப்பு
- புன்னகை
- பதற்றம்

**நீ மின்தூக்கியில் சிக்கிக் கொண்டால் என்ன செய்வாய்?**

2.3.2 - கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையைச் சரியான வேகம், தொனி உச்சரிப்புடன் வாசித்தல்.
- கதையைப் பற்றிய வாய்மொழியான கேள்விகளைக் கேட்டல்.
- கதையை மாணவர்கள் வகுப்பில் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு　**உ.சி.தி:** பகுத்தாய்தல்　21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 13

# பாடம் 3 எதிலும் கவனம்

## வாசித்துச் சரியாக எழுதுக.

1



இது குளியலறை. யாரும் வழுக்கி விழாமல் இருக்க தரையைக் கழுவ வேண்டும். தரையைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். எப்பொழுதும் பாதுகாப்பைப் பேண வேண்டும்.

2

இரவுச் சந்தை. இவற்றை இரவு நேரத்தில் காணலாம். இங்கு நிறைய பொருள்கள் விற்கப்படும். பசுமையான காய்கறிகளை இங்கு வாங்கலாம். உள்ளூர்ப் பழங்களையும் வாங்கலாம். இங்குப் பலரும் விரும்பிச் செல்வது வழக்கமாகும். நானும் அம்மாவுடன் இரவுச் சந்தைக்குச் செல்வேன்.



3



பள்ளிப் பேருந்து. நாங்கள் பள்ளிப் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் செல்வோம். முதலில் நாங்கள் வரிசையாக நின்று பேருந்தில் ஏறுவோம். பேருந்து நின்றவுடன் அவசரப்படாமல் பொறுமையாகக் கீழே இறங்குவோம்.

தினசரி உனது பாதுகாப்பை எவ்வாறு பேணுகிறாய்?

**சொல்வளம்**

- தரை
- வழுக்கி
- கவனமாக
- பேண
- சந்தை

3.2.3 - சொல், சொற்றொடர், வாக்கியம், பத்தி ஆகியவற்றை முறையாகவும் வரிவடிவத்துடனும் எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாசிப்புப் பகுதிகளை வாசித்தல்.
- சொல், சொற்றொடர், வாக்கியம், பத்தி ஆகியவற்றை விளக்குதல்.
- முறையான வரிவடிவத்துடன் பத்தியைப் பார்த்து எழுதுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 14-15

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.




### பழமொழியும் பொருளும்

- **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**

  உடல் நலத்தோடு வாழ்வதே வாழ்க்கையில் ஒருவருக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

4.7.2 - இரண்டாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பழமொழியையும் பொருளையும் அறிதல்.
- பழமொழியையும் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 16-17

## பாடம் 5 இலக்கணம்

### உணர்ச்சி வாக்கியங்களை வாசித்திடுக.

1



காலை நேரம். இனியன் கடற்கரை ஓரம் நடந்தான். கிழக்கே உதித்த கதிரவனின் ஒளிபட்டுக் கடல் நீர் பளிச்சிட்டது. ஆஹா! என்னே அழகு! என்று வியந்து இயற்கை அழகை இரசித்தான்.

2

செந்தூரன் காய்ச்சல் கண்ட தன் தாயுடன் மருத்துவமனையை நெருங்கிக் கொண்டிருந்தான். வாசலில் பலர் காத்திருந்தனர். ஒவ்வொருவரும் நோயின் தாக்கத்தினால் “ஐயோ! வலிக்கிறதே!” என்று முனகினர். அவர்களைப் பார்த்து அவன் பரிவு கொண்டான்.




3



“ஐயோ! அங்கே ஒரு பெரிய உருவம் தெரிகிறதே! எனக்கு அதிக பயமாக இருக்கிறதே! யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்!” எனும் கயல்விழியின் அலறல் சத்தம் கேட்டு அம்மா அவளை எழுப்பினார். அப்பொழுதுதான் தான் கண்டது கனவு என்பதனை உணர்ந்தாள்.

5.4.5- உணர்ச்சி வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- உணர்ச்சி வாக்கியங்களை அறிதல்.
- உணர்ச்சி வாக்கியங்களை எழுதிப் பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 18-19

# தொகுதி 16 அறிவியல்

## பாடம் 1 கதை கூறுவோம்

### படங்களைப் பார்த்துக் கதை கூறுக.

1

ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

2


வீட்டை மறத்தல்

3

ஒவ்வொரு வீடாகச் செல்லுதல்

4

கலங்கி நிற்றல்

5

வழிப்போக்கர் உதவுதல்

6

வீட்டை அடைதல்

**இணையத் தளம்**
https://youtu.be/WhzkNBTIhow

1.8.2 - தொடர்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கொடுக்கப்பட்ட குறிப்புச் சொற்களைக் கொண்டு கதையைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 20

# பாடம் 2 சிரித்து மகிழ்வோம்

## வாசித்து மகிழ்க.




2.3.3- கேலிச்சித்திரங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கேலிச்சித்திரங்களை நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்தல்.
- பாகமேற்று வாசித்துக் காட்டுதல்.
- மாணவர்கள் சுயமாகக் கேலிச் சித்திரத்தைத் தயாரிக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 21-22

# பாடம் 3 எங்கள் ஆராய்ச்சி

## வாசித்து எழுதுக.



1. மீன்கள் நீரில் நீந்தின.
2. குருவி பழத்தைக் கொத்தித் தின்றது.
3. பறவைகள் பறந்து செல்கின்றன.
4. மாணவர்கள் ஆய்வு செய்கின்றனர்.
5. சூரிய ஒளி வெப்பமாக இருந்தது.
6. மரங்கள் செழிப்பாக வளர்ந்தன.
7. இலைகளில் நுண்ணிய துவாரங்கள் உள்ளன.

3.4.5- தனிப்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தனிப்படத்தையொட்டிக் கலந்துரையாடுதல்.
- குறிப்புகளைக் கொண்டு முழு வாக்கியங்களை உருவாக்குதல்.
- முழு வாக்கியங்களை எழுதத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 23-24

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிக.




அரவிந்தன் கணிதத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர். தன்னைப் போலவே தன் மகனும் அப்பாடத்தில் சிறந்து விளங்க வேண்டும் என ஆவல் கொண்டார். சுலபமாகவும் விரைவாகவும் கணக்குகளைச் செய்யும் வழிமுறைகளை மகனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

மகனும் பல நுணுக்கங்களைத் தன் தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டான். **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை** என்பதற்கேற்ப அவர் சொற்படி கேட்டு நடந்தான். பள்ளியின் கணித மேதை எனப் பெயரை வாங்கிப் பெருமை பெற்றான்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.**
  தந்தையின் சொல்லைவிட மேலான அறிவுரை கிடையாது.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்துக் கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிதல்.
- குழுமுறையில் கொன்றை வேந்தனுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனைத் தயாரிக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 25

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 5 இலக்கணம்

### காலங்களை அறிந்து பயன்படுத்துக.

| இறந்த காலம் | |
|---|---|
| பறந்தன | பறவைகள் உயரே பறந்தன. |
| வந்தான் | வளவன் மேடைக்கு வந்தான். |
| ஓடினார்கள் | மாணவர்கள் திடலில் ஓடினார்கள். |

| நிகழ்காலம் | |
|---|---|
| பறக்கின்றன | பறவைகள் உயரே பறக்கின்றன. |
| வருகின்றான் | வளவன் மேடைக்கு வருகின்றான். |
| ஓடுகின்றனர் | மாணவர்கள் திடலில் ஓடுகின்றனர். |

| எதிர்காலம் | |
|---|---|
| பறக்கும் | பறவைகள் உயரே பறக்கும். |
| வருவான் | வளவன் மேடைக்கு வருவான். |
| ஓடுவார்கள் | மாணவர்கள் திடலில் ஓடுவார்கள். |

5.3.7 - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- காலங்கள் தொடர்பான வாக்கியங்களை வாசித்தல்.
- காலங்கள் தொடர்பான சொற்களையும் வாக்கியங்களையும் சுயமாக மாணவர்கள் எழுதுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 26-28

# தொகுதி 17 குடும்பம்

## பாடம் 1 பாட்டியின் வீடு

**திருத்திப் பேசுக.**






1.7.4 - பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்துப் பேச்சு வழக்குச் சொற்களைத் திருத்திச் சொல்லுதல்.
- உரையாடலில் சரியான சொற்களைப் பயன்படுத்தி வாசித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 29

## பாடம் 2 மகிழ்ச்சியான குடும்பம்

### வாசித்து அறிக.




- நாங்கள் சுற்றுலா சென்றோம்.
- அப்பாவின் மகிழுந்தில் சென்றோம்.
- தாத்தாவும் பாட்டியும் வந்தனர்.
- அம்மா உணவு பரிமாறினார்.
- அக்காள் உதவி செய்தாள்.
- அண்ணன் அப்பாவுக்கு உதவினார்.



- தாத்தா ஆனந்தம் கொண்டார்.
- அனைவரும் நீச்சல் அடித்தோம்.
- இயற்கையைக் கண்டு இரசித்தோம்.
- தங்கை நீச்சல் கற்றாள்.
- அழகான மீன்களையும் கண்டோம்.
- மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பினோம்.
- இறைவனுக்கு நன்றி கூறினோம்.

2.4.4 - மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களை வாசித்தல்.
- மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சூழலுக்கு ஏற்ப உருவாக்கிக் கூறுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 30-32

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

# பாடம் 3 பட்டமளிப்பு விழா

## வாசித்து எழுதுக.

அண்ணனின் முகத்தில் அளவிலா ஆனந்தம். ஆம், அன்று என் அண்ணனின் பட்டமளிப்பு விழா. அனைவரும் அவர் பயின்ற பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம்.

உறவினர்கள் அழகிய பூச்செண்டுகளைப் பரிசாகக் கொடுத்தனர்.

அண்ணன் பட்டதாரி உடையில் கம்பீரமாகக் காட்சியளித்தார். அம்மாவும் அப்பாவும் அண்ணனைக் கட்டி அணைத்து ஆசி கூறினர்.

நண்பர்கள் பலரும் அண்ணனுக்கு வாழ்த்துக் கூறினர். கலகலப்பாகப் பேசி எங்கள் அனைவரையும் சிரிக்க வைத்தனர். அண்ணனுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.



அண்ணன் சிறந்த நிலையில் தேர்ச்சி பெற்றார். எங்களுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அவர் மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்துத் தமது இலட்சியத்தை அடைந்ததில் நாங்கள் பெருமிதம் கொண்டோம். உழைப்பும் முயற்சியும் வெற்றி தரும் என்பதை உணர்ந்தேன்.

தாத்தாவும் பாட்டியும் கைப்பேசியில் அழைத்தனர். அவர்களும் வாழ்த்துக் கூறினர்.

உன் எதிர்கால ஆசை என்ன? ஏன் அதனைத் தேர்ந்தெடுத்தாய்?

**சொல்வளம்**

- பூச்செண்டு
- இலட்சியம்
- கலகலப்பாக
- பெருமிதம்
- தேர்ச்சி




3.4.3 - உயர்திணை, அஃறிணைக்கேற்ப வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாசிப்புப் பகுதியில் உள்ள உயர்திணை, அஃறிணைச் சொற்களை வாசித்து அடையாளம் காணச் செய்தல்.
- உயர்திணை, அஃறிணைச் சொற்களைக் குழு முறையில் பட்டியலிடச் செய்தல்.
- குழுமுறையில் வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் பக்கம் : 33-35

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிக.



### புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **உடலினை உறுதிசெய்.**
  நலமாக வாழ உடலை நன்றாகப் பேண வேண்டும்.
- **ஊண்மிக விரும்பு.**
  உடலுக்கு நலத்தைத் தருகின்ற உணவுகளை விரும்பி உண்ண வேண்டும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் கூறச் செய்தல்.
- புதிய ஆத்திசூடியையும் பொருளையும் எழுதி அழகான மின்னட்டைகள் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு  **உ.சி.தி:** பயன்படுத்துதல்  21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 36

## பாடம் 5 இலக்கணம்

### தன், தம் அறிக.


‘தன்’ என்பது உயர்திணை ஒருமையையும் அஃறிணை ஒருமையையும் குறிக்கும்.

‘தம்’ என்பது உயர்திணை மரியாதை ஒருமையையும் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் குறிக்கும்.

### வாசித்து அறிக.

1. நகுலன் தன் புத்தகத்தை எடுத்தான்.
2. கிளி தன் அலகால் பழங்களைக் கொத்தியது.
3. தம்பி தன் பள்ளிச் சீருடையை அணிந்தான்.
4. யானை தன் இரு காதுகளை அசைத்தது.
5. மயில் தன் அழகிய தோகையை விரித்தது.
6. அப்பா தம் மகிழுந்தைச் செலுத்தினார்.
7. மாணவர்கள் தம் வகுப்பறைக்குச் சென்றனர்.
8. பறவைகள் தம் கூடுகளுக்குப் பறந்தன.
9. அத்தை தம் மகளை அழைத்து வந்தார்.
10. மாடுகள் தம் கன்றுகளோடு மேய்கின்றன.







5.3.8 - ஒரு, ஓர் / அது, அஃது / இது, இஃது / தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தன், தம் இலக்கண விதிகளை விளக்குதல்.
- வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- மாணவர்கள் சுயமாகச் சில வாக்கியங்கள் தயாரிக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 37

# தொகுதி 18 நன்னெறி

## பாடம் 1 உனக்கழகு

### கவிதையைப் பாடுக.


வானுக்கு நிலவழகு! - நெல்
வயலுக்கு விளைவழகு!
தேனுக்குச் சுவையழகு! - தம்பி
தீங்கல்வி உனக்கழகு!

மயிலுக்குச் சிறகழகு! - புள்ளி
மானுக்குக் கண்ணழகு!
குயிலுக்குக் குரலழகு! - தம்பி
குணங்களே உனக்கழகு!

பூவுக்கு நிறமழகு! - நல்ல
பொன்னுக்கு ஒளியழகு!
பாட்டுக்குப் பொருளழகு! - தம்பி
பண்டுமை உனக்கழகு!

தோளுக்கு வலியழகு - நல்ல
தோப்புக்கு மரமழகு!
வாளுக்குக் கூரழகு! - தம்பி
வாய்மையே உனக்கழகு!

- கோவி. செல்வன்



1.4.2 - செவிமடுத்த கவிதையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை நயமாக வாசித்தல்.
- கவிதையில் கூறப்பட்ட சொற்களின் பொருளை விளக்குதல்.
- கவிதையில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை எழுதிக் கூறத் துணை புரிதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 38


# பாடம் 2 கடமைகளைப் போற்று

## வாசித்து அறிக.



- நித்திரைக்குச் சென்றான்.
- நன்றாக உறங்கினான்.
- அதிகாலை எழுந்தான்.





- சுத்தமாகக் குளித்தான்.
- சீருடை அணிந்தான்.
- இறைவனை வணங்கினான்.





- வகுப்பறையில் நுழைந்தான்.
- பாடங்களைக் கற்றான்.
- பாராட்டைப் பெற்றான்.





- இல்லம் திரும்பினான்.
- உணவு உண்டான்.
- மாலையில் விளையாடினான்.



2.4.3 - இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படங்களைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைப் பிழையற வாசித்தல்.
- சூழலுக்குப் பொருத்தமான வேறு சில வாக்கியங்களை மாணவர்கள் அமைக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 39-40

# பாடம் 3 நல்ல நண்பன்

## வாசித்து எழுதுக.



- நண்பன்.
- இவன் நண்பன்.
- இவன் என் நண்பன்.
- என் நண்பன் அன்பானவன்.
- என் நண்பன் பொறுப்பானவன்.
- என் நண்பன் மிகவும் நல்லவன்
- நான் என் நண்பனுடன் ஒற்றுமையாக விளையாடுவேன்.

- ஆசிரியர்.
- இவர் ஆசிரியர்.
- இவர் என் ஆசிரியர்.
- என் ஆசிரியர் மிகவும் அன்பானவர்.
- என் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர்.
- என் ஆசிரியர் சிறப்பாகப் பாடம் போதிப்பார்.
- என் ஆசிரியரை எனக்கு மிகவும் பிடிக்கும்.






- நூலகம்.
- இது நூலகம்.
- இது பெரிய நூலகம்.
- நான் தினமும் நூலகம் செல்வேன்.
- நூலகத்தில் நிறைய புத்தகங்கள் உள்ளன.
- நான் நூலகப் புத்தகங்களை இரவல் வாங்குவேன்.

3.4.4 - சொல்லை விரிவுபடுத்தி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**
- சொல்லை விரிவுபடுத்தும் முறையை விளக்குதல்.
- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- மேலும் சில சொற்களை அறிந்து வாக்கியத்தை விரிவுபடுத்தி எழுதுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 41

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிக.



நிமலன் பண்புள்ளவன். தன் அம்மாவிடம் அன்பாக நடந்து கொள்வான்.

பள்ளி முடிந்து வீடு திரும்பியவுடன் தன் அம்மாவிற்கு உதவி செய்வான். தன் தாயாரின் குணம் அறிந்து செயல்படுவதில் நிமலன் சிறந்தவன். அவரின் சிரமத்தை அறிந்து நடந்துகொள்வான்.




தினமும் பள்ளிக்குச் செல்லும் முன் தன் தாயாரை அணைத்து அன்பு முத்தம் கொடுத்துச் செல்வான். தாயின் ஆசியையும் பெற்றுச் செல்வான். **தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை** என்பதை மனத்தில் கொண்டு செயல்படுவான்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை**

  பெற்ற தாயைவிட ஒருவருக்குச் சிறந்த கோயில் வேறெதுவும் கிடையாது.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைச் சரியாக வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிதல்.
- வாசித்த கொன்றை வேந்தனையும் பொருளையும் எழுதிப் புத்தகக் குறியீட்டு அட்டை தயாரித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 42

# பாடம் 5 இலக்கணம்


## வினைமுற்று அறிக.

- ஒரு வினையின் கருத்து முற்றுப்பெற்றிருக்கும் போது **வினைமுற்று** எனப்படும்.
- **வினைமுற்று** திணை, எண், பால், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்.

**எடுத்துக்காட்டு:**




1. தாரணி பட்டம் **பெற்றாள்**.
2. மாடு புல் **மேய்கிறது**.
3. மாணவர்கள் பாடம் **படிப்பார்கள்**.
4. நாங்கள் அப்பாவிற்குப் பரிசு **தந்தோம்**.



5. புயல் வேகமாக **வீசியது**.
6. குயில்கள் சோலையில் **கூவின**.



7. கமலம் நடைப்பயிற்சி **செய்தாள்**.
8. மலர் நறுமணம் **வீசியது**.
9. பேருந்து வேகமாகச் **சென்றது**.



10. கப்பல் கடலில் **செல்லும்**.

| வினைமுற்று | திணை | எண் | பால் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| பெற்றாள் | உயர்திணை | ஒருமை | பெண்பால் | படர்க்கை | இறந்த காலம் |
| மேய்கிறது | அஃறிணை | ஒருமை | ஒன்றன்பால் | படர்க்கை | நிகழ்காலம் |
| படிப்பார்கள் | உயர்திணை | பன்மை | பலர்பால் | படர்க்கை | எதிர்காலம் |
| தந்தோம் | உயர்திணை | பன்மை | பலர்பால் | தன்மை | இறந்த காலம் |

## வாசித்து அறிக.

1 பறவைகள் உணவு **தேடின.**

- அஃறிணை
- பன்மை
- பலவின்பால்
- படர்க்கை
- இறந்த காலம்

2 சிறுவர்கள் பள்ளிக்குச் **செல்கின்றனர்.**

- உயர்திணை
- பன்மை
- பலர்பால்
- படர்க்கை
- நிகழ்காலம்

3 வளர்மதி வீணையை **மீட்டுகிறாள்.**

- உயர்திணை
- ஒருமை
- பெண்பால்
- படர்க்கை
- நிகழ்காலம்

4 அண்ணன் நகைச்சுவையாகப் **பேசினார்.**

- உயர்திணை
- ஒருமை
- ஆண்பால்
- படர்க்கை
- இறந்த காலம்

1. நான் ஆற்றில் மீன் **பிடித்தேன்.**
2. அம்மா துணி **துவைக்கிறார்.**
3. சிறுவர்கள் பந்து **விளையாடுவர்.**
4. உழவன் வயலை **உழுகிறான்.**
5. முயல் விரைவாக **ஓடியது.**





5.3.10 -வினைமுற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வினைமுற்றுச் சொற்களை வாசித்து அறிதல்.
- வினைமுற்றுச் சொற்களையும் வாக்கியங்களையும் மாணவர்கள் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 43-46

# தொகுதி 19 சுற்றுச்சூழல்

## பாடம் 1 சுத்தம் செய்வோம்

பாகமேற்று உரையாடுக.






1.7.5 - கூவும், கொக்கரிக்கும், கீச்சிடும், கரையும், அலறும், அகவும், முரலும் ஆகிய ஒலிமரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பிழையற வாசித்தல்.
- ஒலிமரபுச் சொற்களை ஒலித்துக் காட்டுதல்.
- ஒலிமரபுச் சொற்களுக்கு ஏற்ற வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல்  **உ.சி.தி:** பகுத்தாய்தல்  21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 47

## பாடம் 2 வருமுன் காப்போம்

### கதையைச் சரியாக வாசித்திடுக.



எழிலரசியின் பெற்றோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு டிங்கிக் காய்ச்சல் கண்டுள்ளது. இதனைத் தெரிந்து கொண்ட எழிலரசியின் வகுப்பாசிரியர் அவளுக்கு ஆறுதல் கூறினார்.

ஆசிரியர் மாணவர்களுக்கு டிங்கிக் கொசுக்கள் உருவாகும் விதத்தையும் அதன் பாதிப்பையும் விளக்கினார். எழிலரசியின் வீட்டின் சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

அனைவரும் ஒன்றிணைந்து அவள் வீட்டின் சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்யும் எண்ணம் கொண்டோம். அதன்படி நாங்கள் அனைவரும் எழிலரசியின் வீட்டிற்குச் சென்றோம்.

வகுப்பாசிரியரும் அங்கு வந்து சேர்ந்த அவரின் நண்பர்களும் சுத்தம் செய்ய ஆரம்பித்தனர். நீர் தேங்கிய இடங்களைச் சரிசெய்தனர். குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தனர். வீட்டுச் சுற்றுப்புறத் தூய்மையை எங்களுக்கும் வலியுறுத்தினர்.

கொசுக்களை ஒழிக்க நாம் சுத்தத்தைப் பேண வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தோம். எழிலரசி ஆசிரியருக்கு நன்றி கூறினாள்.



2.3.2- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுதல்.
- கதையை மீண்டும் பாகம் ஏற்று வாசிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் பக்கம் : 48

# பாடம் 3 மூலிகைப் பூங்கா

## நிரல்படுத்தி வாசித்து எழுதுக.





- மூலிகைச் செடிகளுக்கான பெயர் அட்டைகளை ஊன்றினோம்.
- அட்டவணைப்படி மூலிகைப் பூங்காவைப் பாதுகாத்தோம்.
- மூலிகைச் செடிகளை நட்டு வைத்தோம்.

அறுபதாம் பச்சிலை

- பள்ளியில் மூலிகைப் பூங்கா அமைக்கத் திட்டமிட்டோம்.
- வேலைகளைப் பகிர்ந்துகொண்டோம்.

கற்பூரவள்ளி

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோம்.
- தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்றோம்.
- மூலிகைச் செடிகளுக்குத் தினமும் நீர் ஊற்றினோம்.
- எங்களின் முயற்சியைப் பலரும் பாராட்டினர்.
- பெற்றோர் எங்களுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்தனர்.




- வகுப்பு ஆசிரியருடன் கலந்து பேசினோம்.
- மூலிகைப் பூங்காவிற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தோம்.
- பெற்றோரின் உதவியை நாடினோம்.

3.5.1 - வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசித்தல்.
- வாக்கியங்களை நிரல்படுத்தி வாசித்தல்.
- வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 49-51

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிக.

அ



டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் முயற்சி.




ஏவுகணை பாய்ச்சப்படுகிறது.

ஆ



கரிகால் சோழனின் வீரம்.



மக்கள் மன்னனை வாழ்த்துதல்.

### புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **எண்ணுவது உயர்வு.**
  உயர்வான எண்ணம் மேன்மை தரும்.
- **ஏறுபோல் நட.**
  அஞ்சா நெஞ்சத்துடன் செயற்பட வேண்டும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- கூறப்பட்ட புதிய ஆத்திசூடியையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- புதிய ஆத்திசூடிக்கு ஏற்ப சூழல்களை உருவாக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 52

# பாடம் 5 இலக்கணம்

## காலங்கள் அறிக.



- திருமதி குமுதா செடிகளை நட்டார்.
- செடிகள் செழிப்பாக வளர்ந்தன.
- செடிகளுக்குத் தினமும் நீர் ஊற்றினார்.
- செடிகளில் பூக்கள் பூத்தன.
- பூக்களைப் பறித்து மாலை தொடுத்தார்.

- குகன் பள்ளிக்குச் செல்கிறான்.
- தங்கையை உடன் வர அழைக்கிறான்.
- இருவரும் மகிழ்ச்சியாக நடக்கின்றனர்.
- இருவரும் சுத்தமான சீருடை அணிந்துள்ளனர்.





- அக்காள் மெது ஓட்டப் பயிற்சி செய்வாள்.
- சத்துள்ள உணவை உண்பாள்.
- இசையை விரும்பிக் கேட்பாள்.
- உடல் ஆரோக்கியத்தைப் பேணுவாள்.

உணவும் உடற்பயிற்சியும் எவ்வாறு ஆரோக்கியத்திற்குத் துணைபுரிகின்றன?

**சொல்வளம்**

- செழிப்பாக
- மெது ஓட்டம்
- தினமும்
- ஆரோக்கியம்
- பேணுவாள்

5.3.7 - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- காலங்கள் பற்றிய சொற்களைக் கேட்டு நினைவுகூர்தல்.
- வாக்கியங்களை வாசித்துக் காலங்களை அறிதல்.
- வாக்கியங்களைக் காலங்களுக்கு ஏற்பச் சுயமாக எழுதுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 53-54

# தொகுதி 20 மனமகிழ் நடவடிக்கைகள்

## பாடம் 1 எங்களை அறியுங்கள்

**வாசித்துக் கலந்துரையாடுக.**






**இணையத் தளம்**

http://www.tamilacademy.com/xl_tamil/exam.php?title_id=21

விலங்குகளால் பேச முடிந்தால் உலகில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும்?

1.7.6 - கர்ஜிக்கும், சீறும், கத்தும், கனைக்கும், பிளிறும், உறுமும் ஆகிய ஒலிமரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பிராணிகளின் ஒலிமரபுச் சொற்களை வாசித்து அறிதல்.
- மாணவர்கள் பாகம் ஏற்று ஒலிமரபுச் சொற்களை ஒலித்தல்.


**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 55

# பாடம் 2 சிரிப்பலை

## வாசித்து அறிக.







2.3.3 - கேலிச்சித்திரங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கேலிச்சித்திரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசித்தல்.
- பாகம் ஏற்று வாசித்துக் காட்டுதல்.
- குழு முறையில் கேலிச்சித்திரம் உருவாக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 56-57

# பாடம் 3 வண்ண மீன்கள்

## வாசித்து எழுதுக.



- என் வீட்டின் பூங்காவில் ஒரு குளம் உள்ளது.
- அக்குளத்தை என் அப்பா உருவாக்கினார்.
- குளத்தில் நான் வண்ண மீன்களை வளர்க்கிறேன்.
- வண்ண மீன்கள் மிகவும் அழகாக இருக்கும்.
- வண்ண மீன்கள் பொன்னிறமாக மினுமினுக்கும்.
- நான் அவற்றிற்குத் தினமும் தீனி போடுவேன்.
- மீன் குளத்தை அடிக்கடி சுத்தம் செய்வேன்.
- வண்ண மீன்கள் அங்கும் இங்கும் நீந்துவதைக் கண்டு இரசிப்பேன்.
- வண்ண மீன்களை நான் கவனமாகப் பார்த்துக் கொள்வேன்.

### சொல்வளம்

- பூங்கா
- நீந்துவதை
- பொன்னிறம்
- கவனமாக
- தீனி

3.4.5- தனிப்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- தனிப்படத்தையொட்டிக் கலந்துரையாடுதல்.
- தனிப்படத்தையொட்டிய வாக்கியங்களை வாசித்தல்.
- சூழலையொட்டிய மேலும் சில வாக்கியங்களை மாணவர்கள் உருவாக்கி எழுதுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 58

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிக.




அன்பு மகள் சாருமதிக்கு,
இங்கு நான் நலம். அங்கு நீங்கள் அனைவரும் நலமுடன் இருக்க வேண்டுகிறேன்.

உன் பள்ளி ஏற்பாடு செய்துள்ள கல்விச் சுற்றுலாவில் கலந்து கொள்ளவிருப்பதை என்னிடம் கூறி ஆலோசனை கேட்டிருந்தாய். சிறுவயதிலிருந்தே பல இடங்களைச் சுற்றிப் பார்க்க ஆவல் கொண்டவள் நீ. உன் ஆர்வத்தைப் பாராட்டுகின்றேன். மேலும், **நுண்ணிய கருமமும் எண்ணித் துணிக** என்பது போலச் சிறிய செயலாக இருந்தாலும் நன்கு ஆராய்வது எனும் உனது குணம் என்னைப் பெரிதும் வியக்க வைக்கிறது.

நமது பொது அறிவை வளர்த்துக் கொள்ள கல்விச் சுற்றுலா மிகவும் முக்கியமானது. எனவே, நீ விரும்பியபடியே சுற்றுலாவிற்குக் கவனத்துடன் சென்றுவர சம்மதிக்கின்றேன். ஆசிரியர்களின் சொற்படி கேட்டுப் பாதுகாப்பாகச் சென்று வா.

நன்றி

இப்படிக்கு,
அப்பா.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **நுண்ணிய கருமமும் எண்ணித் துணிக.**

  மிகச் சிறிய செயலாக இருப்பினும் அதனை நன்கு ஆராய்ந்த பிறகே மேற்கொள்ள வேண்டும்.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கடிதத்தைத் தக்க தொனியோடு வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் கூறுதல்.
- மாணவர்கள் கொன்றை வேந்தனுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 59

## பாடம் 5 இலக்கணம்

### வினைமுற்று அறிக.

வினைமுற்று திணை, எண், பால், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்.




வாசித்திடுக.

**மாணவி சிறப்பாக நடனம் ஆடினாள்.**

- → உயர்திணை
- → ஒருமை
- → பெண்பால்
- → படர்க்கை
- → இறந்த காலம்

**ஆடுகள் திடலில் மேய்கின்றன.**



- → அஃறிணை
- → பன்மை
- → பலவின்பால்
- → படர்க்கை
- → நிகழ்காலம்



**இனியன் இனிமையாகப் பாடுவான்.**

- → உயர்திணை
- → ஒருமை
- → ஆண்பால்
- → படர்க்கை
- → எதிர்காலம்


**நண்பர்கள் விரைவாக நடக்கின்றனர்.**



- → உயர்திணை
- → பன்மை
- → பலர்பால்
- → படர்க்கை
- → நிகழ்காலம்


## வாசித்து அறிக.

1




அப்பா மெதுவோட்டம் ஓடுகிறார்.

2




குதிரைகள் பந்தயத்தில் ஓடுகின்றன.

3



மீன்கள் வேகமாக நீந்துகின்றன.

4



சிறுவன் பந்தை உதைக்கின்றான்.

5



மாணவிகள் கோலம் இடுவர்.

6




காவியன் நூலகம் சென்றான்.

7



திருமதி காவேரி வீணை மீட்டுவார்.

8




பெற்றோர்கள் திரளாக வந்தனர்.

5.3.10 - வினைமுற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வினைமுற்று பற்றிய விளக்கம் அளித்தல்.
- வாக்கியங்களை வாசித்து திணை, எண், பால், இடம், காலம் ஆகியவற்றைக் கூறுதல்.
- கொடுக்கப்பட்ட சொற்களில் மாணவர்கள் வாக்கியங்களை அமைத்து அவற்றை விளக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 60-61

# தொகுதி 21 வரலாறு

## பாடம் 1 திருத்தி வாசித்திடுக

### கலந்துரையாடுக.




**இணையத் தளம்**

https://youtu.be/xV8ZRSq94_U

1.7.4 - பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகம் ஏற்று வாசித்தல்.
- பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திக் கூறுதல்.
- திருத்தப்பட்ட சொற்களைக் கொண்டு மீண்டும் உரையாடலை நடித்துக் காட்டுதல்.


**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் பக்கம் : 62

# பாடம் 2 உலகில் நாங்கள்

## வாசித்து அறிக.

என்னைப் புகைவண்டி என்று அழைப்பர். என்னை முதலில் உருவாக்கியவர் ஜார்ஜ் ஸ்டீபன்சன் எனும் ஆங்கிலேயர். இவரைப் புகைவண்டியின் தந்தை என்று புகழ்வார்கள். நான் செல்லும் சாலையின் பெயர் தண்டவாளம். அன்று புகையை வெளியாக்கி ஓடினேன். இன்று பல வடிவங்களில் சொகுசாகவும் நவீனமாகவும் உருமாற்றம் கண்டுள்ளேன்.






என்னைத் தொலைபேசி என்று அழைப்பர். என் வாயிலாகச் செய்திகளை எளிதாக அனுப்பலாம். ஆரம்பத்தில் அலுவலகங்களிலும் சில முக்கிய இடங்களில் மட்டுமே நான் காணப்பட்டேன். ஆனால், இன்று எல்லா இடங்களிலும் உலா வருகின்றேன். இன்று திறன்பேசி என்ற பெயரில் வலம் வருகிறேன். என்னை உருவாக்கியவர் யார் தெரியுமா? அவர்தான் அலெக்சாண்டர் கிரகம்பெல் எனும் ஆங்கிலேயர்.

நீ ஒரு விஞ்ஞானியானால் உனது கண்டுபிடிப்பு எதுவாக இருக்கும்? ஏன்?

உலகை ஒளிமயமாக்கும் மின்சார விளக்கு நான். ஏழ்மையில் பிறந்த எடிசன், சிறுவயதிலேயே வேலைக்குச் சென்றார். புகை வண்டியில் செய்தித் தாள்கள், உணவுப் பொருள்கள் விற்கும் வேலையைச் செய்தார். ஓய்வு நேரங்களில் புகைவண்டியிலேயே புத்தகங்களைப் படித்து மொழியறிவை வளர்த்துக் கொண்டார். அறிவியல் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். படித்தவற்றை ஆராய்வதிலும் தன் கவனத்தைச் செலுத்தினார். அவரின் அயராத உழைப்பில் உருவானவன் நான் மட்டும் அல்லன் இன்னும் பலரும் உண்டு. இன்று பொழுதுபோக்கு அம்சமாகத் திகழும் திரைப்படக் காட்சி, கிராமோபோன், இசைத் தட்டு, தொலைபேசி என்று பல கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர் இவரே.



**சொல்வளம்**

- சொகுசு
- உருமாற்றம்
- திறன்பேசி
- புகைவண்டி
- அம்சம்

2.2.15 -லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசித்தல்.
- லகர, ழகர, ளகரச் சொற்களைக் கண்டறிதல்.
- லகர, ழகர, ளகரச் சொற்களைப் பட்டியலிட்டுச் சரியாக வாசித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 63-64

# பாடம் 3 கண்டறிந்து வாசித்திடுக

## சொற்களைக் கண்டறிந்து எழுதுக.



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | ம | த | லை | ந | க | ர | ம் | க | உ |
| ளை | லா | ம | லே | சி | யா | ம் | ழி | ழ | ழை |
| ச் | க் | ஆ | ம் | நெ | த | ர | ம் | க | ப் |
| ச | கா | ங் | ல | ல் | மி | க | ள | ம் | பா |
| ல் | மா | கி | கா | வ | ழ | ந | நி | மி | ளி |
| தொ | நி | லே | க் | ய | ர் | ர் | மா | ம் | க |
| ழி | ல | ய | ழை | ல் | த | பூ | ர் | ல | ள் |
| ல் | ம் | ர் | ம | ழ | லை | ம் | கூ | கா | வ |
| ளை | சு | ல் | தா | ன் | வ | ல | ங் | சி | சூ |
| ஆ | லோ | ச | க | ர் | ர் | லா | லா | ட் | ல் |
| ம | த் | த | ள | ம் | கி | கோ | சி | ஆ | ரி |

3.3.15 - லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கண்டறிதல்.
- கண்டறிந்த சொற்களைப் பட்டியலிட்டு எழுதுதல்; பயன்படுத்துதல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 65-66

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிக.



தமிழ், மலாய், அரபு, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் புலமைமிக்க எழுத்தாளர் அப்துல்லா. சரளமாக மொழிபெயர்ப்புச் செய்வதிலும் புலமை பெற்ற இவரை முன்ஷி அப்துல்லா என்று அழைத்தனர்.

முன்ஷி அப்துல்லாவின் தந்தை திரு. அப்துல் காதர். அவர் செல்வாக்குமிக்க ஒரு வர்த்தகர். அவருடைய மூதாதையர் தமிழகத்தின் நாகூர் எனும் ஊரைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம்கள். தன் மகன் அப்துல்லாவை இளமையிலேயே கல்வி கற்கத் தூண்டினார். தம்மைப் போலவே பன்மொழி தெரிந்தவராக அப்துல்லா வரவேண்டுமென அவருடைய தந்தை விரும்பினார்.

முன்ஷி அப்துல்லாவும் **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்** எனப் போற்றி நடந்தார். தன் தாய் தந்தை சொல்வதை மதித்தார். வயதில் மூத்தோர் கூறும் அறிவுரைகளையும் கேட்டுக் கடைப்பிடித்தார். அவரின் ஊக்கம், உற்சாகம், நுண்ணறிவு, பணிவு ஆகிய அனைத்தும் சேர்ந்து அவரைப் புகழ்பெறச் செய்தன. தமது 14ஆவது வயதிலேயே பன்மொழிப் புலவராகப் புகழ்பெற்றார். மூத்தோர் சொல்லின் பயனை உணர்ந்தார்.

### கொன்றை வேந்தனும் பொருளும்

- **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**
  மூத்தவர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பது சிறப்பைத் தரும்.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.


**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் வாசித்து அறிதல்.
- கொன்றை வேந்தனுக்குப் பொருத்தமான வேறு சூழலை உருவாக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 67

## பாடம் 5 இலக்கணம்

### ஒருமை, பன்மை அறிக.



1. **அரவம்** வசந்தனைத் தீண்டியது.
   **அரவங்கள்** ஊர்ந்து செல்லும்.



2. அத்தை வாசலில் **கோலம்** இட்டாள்.
   புள்ளிக் **கோலங்கள்** அழகாக இருந்தன.

3. அது பெரிய **மண்டபம்**.
   என் வசிப்பிடத்தில் இரண்டு **மண்டபங்கள்** உள்ளன.



4. அப்பா விரலில் **மோதிரம்** அணிந்தார்.
   தங்க **மோதிரங்கள்** அழகாக இருந்தன.





5. தம்பியின் சொத்தைப்**பல்** விழுந்தது.
   அண்ணனின் **பற்கள்** வெண்மையாக இருந்தன.



6. வள்ளி **கல்** தடுக்கிக் கீழே விழுந்தாள்.
   தொழிலாளர்கள் **கற்களை** அடுக்கினர்.

7. ஆசிரியர் **சொல்** அட்டை தயாரித்தார்.
   **சொற்கள்** பலவற்றைச் சேர்த்து வாக்கியம் அமைத்தேன்.

5.3.5 -ஒருமை பன்மையில் 'ம் - ங்' ஆக மாறும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
5.3.6 -ஒருமை பன்மையில் 'ல் - ற்' ஆக மாறும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஒருமை, பன்மை 'ம் - ங்' ஆக மாறுதல். 'ல் - ற்' ஆக மாறுதலை விளக்குதல்.
- வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- மாணவர்கள் சுயமாக வாக்கியங்கள் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 68-69

# தொகுதி 22 இலக்கியம்

## பாடம் 1 இலக்கிய மேடை


### கேள்விகள் கேட்டுப் பதில் கூறுக.

எங்குச் செல்கிறாய்?

எங்கு நிற்க வேண்டும்?

எப்பொழுது அங்குச் சென்று சேர்வாய்?

எங்கு நடைபெறும்?



எப்பொழுது நிகழ்ச்சி தொடங்கும்?

எப்பொழுது நாம் சந்திக்கலாம்?

எப்பொழுது புறப்படுவாய்?

எங்கு நம் மகிழுந்தை நிறுத்தலாம்?

1.5.2 - எங்கு, எப்பொழுது எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.
1.6.2 - எங்கு, எப்பொழுது எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வினாக்களுக்கு ஏற்பப் பதில் கூறப் பணித்தல்.
- எங்கு, எப்பொழுது எனும் வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டல்.
- குழு முறையில் மாணவர்களைக் கேள்விகள் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** பயன்படுத்துதல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 70-72

# பாடம் 2 நீதி கேட்டாள்

ஏற்ற தொனியோடு வாசித்திடுக.



## சொற்றொடர்களைப் வாசித்திடுக.

**ஞ்ச**

ஊஞ்சல் ஆடு
தஞ்சம் கேட்டேன்
மஞ்சம் வேண்டும்
மஞ்சள் நிறம்
கொஞ்சம் கொடு
நெஞ்சு வலி

**ந்த**

வசந்த காலம்
சொந்த வீடு
யானைத் தந்தம்
சந்தனப் பொட்டு
திறந்த இல்லம்
பந்த பாசம்

**ங்க**

தங்க வளையல்
சிங்க நடனம்
வணங்க வேண்டும்
எங்கள் இல்லம்
சதுரங்கப் போட்டி
மங்கள வாத்தியம்

**ம்ப**

குடும்ப தினம்
சிலம்பக் கலை
மரப் பம்பரம்
விளம்பரப் பலகை
கதம்ப ஊறுகாய்
ஐம்பத்து ஆறு

**ண்ட**

ஏழு கண்டம்
பொது மண்டபம்
தண்டம் கட்டு
இருண்ட வீடு
திரண்ட மக்கள்
நீண்ட ஆறு

**ன்ற**

தென்றல் காற்று
அகன்ற நெற்றி
மன்றக் கூட்டம்
சென்ற வாரம்
வென்ற பரிசு
தின்ற பழம்

2.2.23 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நாடகத்தைப் பாவனையுடன் வாசித்தல்.
- நாடகத்தைப் பாகமேற்று நடித்தல்.
- இனவெழுத்துச் சொற்களை அடையாளம் கண்டறிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 73

## பாடம் 3 சிறந்த மன்னர்

### இனவெழுத்து அறிக.

சிபி சக்கரவர்த்தி சிறந்த பண்பு நலன் கொண்ட மன்னர். இரக்க குணம் கொண்டவர். எல்லா உயிர்களிடத்திலும் அன்பும் பாசமும் மிகுந்தவர்.

ஒருநாள் அரண்மனை நந்தவனத்தில் மன்னர் அமர்ந்திருந்தார். புறா ஒன்று பறந்து வந்தது. மன்னரின் மடியில் வீழ்ந்தது. புறாவைக் கண்ட மன்னர், உடனே அதை எடுத்து அணைத்துக் கொண்டார்.

அப்புறாவைத் தொடர்ந்து வந்த பருந்து மன்னரின் அருகில் வந்தது. "மன்னனே! நான் இப்புறாவை மிகுந்த ஆவலுடன் துரத்தி வந்தேன். இஃது என் பசியைத் தீர்க்க உகந்த இரை. என்னிடம் அதை ஒப்படைத்து விடு!" என்றது.






“உன்னைப் பட்டினி போட மாட்டேன். புறாவையும் தர மாட்டேன்,” என்றார் மன்னர் சிபி.

பணியாட்களை அழைத்து ஒரு தராசையும் கத்தியையும் கொண்டுவரப் பணித்தார்.

தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்துவிட்டு மறு தட்டில் தம் தொடையின் சதையை வெட்டி வைத்தார். தட்டோ புறாவின் பக்கம் சாய்ந்தது. ஆனாலும், மன்னர் சிறிதும் கலங்கவில்லை.

சிறிது நேரத்தில் புறாவும் பருந்தும் தேவர்களாக மாறின. அவர்கள் சிபி சக்கரவர்த்தியின் முன் தோன்றி மன்னரின் இரக்க குணத்தைப் பாராட்டினர்.

மன்னரின் பரிவு மனப்பான்மை பற்றி உன் கருத்தைக் கூறுக.

**சொல்வளம்**

- பண்பு நலன்
- நியாயம்
- நந்தவனம்
- பணியாட்கள்
- உகந்த

3.3.23 - ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கதையை வாசித்து இனவெழுத்துச் சொற்றொடர்களை அறிந்து எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 74-75

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## கொன்றை வேந்தனையும் பொருளையும் அறிக.



### கொன்றை வேந்தனும் பொருளும்

- **சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**

  உறவினரோடு கூடி வாழ்வதே சிறப்பாகும்.

4.2.2 - இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்தல்.
- கொன்றை வேந்தனையும் பொருளையும் விளக்குதல்.
- கொன்றை வேந்தனுக்குப் பொருத்தமான மாணவர்களின் அனுபவத்தைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 76

## பாடம் 5 இலக்கணம்

### காலங்களை அறிக.




- அண்ணன் பல்கலைக்கழகத்தில் பயின்றார்.
- அக்காள் பல்கலைக்கழகத்தில் பயில்கின்றாள்.
- நானும் பல்கலைக்கழகத்தில் பயில்வேன்.



- துளசி அலுவலகத்தில் வேலை செய்தாள்.
- மதுமிதா அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறாள்.
- நீலாவதி அலுவலகத்தில் வேலை செய்வாள்.



- காவேரி பூப்பந்து விளையாடினாள்.
- தேசிகன் பூப்பந்து விளையாடுகிறான்.
- கீர்த்தனன் பூப்பந்து விளையாடுவான்.



- அதிகாரி நிகழ்ச்சிக்கு வந்தார்.
- மாணவர்கள் நிகழ்ச்சிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.
- பெற்றோர் நிகழ்ச்சிக்கு வருவார்கள்.



- புறா உயரே பறந்தது.
- பட்டம் உயரே பறந்து கொண்டிருக்கின்றது.
- கழுகு உயரே பறக்கும்.

5.3.7 - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- காலங்கள் பற்றி நினைவு கூர்தல்.
- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள காலச் சொற்களைப் பட்டியலிட்டு வாசித்துக் காட்டுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 77

# தொகுதி 23 சமயம்

## பாடம் 1 கேட்டு உரையாடுக

கலந்துரையாடுக.







1. எத்தனை நாள்கள் இஸ்லாமியர்கள் நோன்பு நோற்பர்?
2. இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையை வருடத்திற்கு எத்தனை முறை கொண்டாடுவர்?
3. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கும் ஆங்கிலப் புத்தாண்டிற்கும் இடையில் எத்தனை நாள்கள் உள்ளன?








4. தீபாவளிக்குப் புத்தாடை வாங்க எவ்வளவு பணம் செலவழிப்பாய்?
5. பலகாரங்களை அடுக்க உன் தாயாருக்கு எவ்வளவு நேரம் உதவி செய்தாய்?

1.5.3 - எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.
1.6.3 - எத்தனை, எவ்வளவு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலைப் பார்த்துக் கலந்துரையாடுதல்.
- கேள்விக்கு ஏற்ற பதிலை அளித்தல்.
- வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் பக்கம் : 78-80

# பாடம் 2 வழிபாடு

## வாசித்து அறிக.



அன்று வெள்ளிக்கிழமை. வாணியும் அவள் தாயாரும் கோவிலுக்குச் செல்ல எண்ணினர். அவர்கள் சுத்தமான ஆடைகளை அணிந்தனர். மகிழுந்தில் சென்றனர். கோவிலில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. வட்டமான தட்டில் வைத்த அர்ச்சனைப் பொருள்களைக் கொடுத்தனர். அர்ச்சகர் அர்ச்சனை செய்தார். மனமுருகப் பிரார்த்தித்தனர்.

அலியும் கரீமும் உற்ற நண்பர்கள். ஒருவர் மற்றவருக்குச் சலாம் சொல்லிக் கொண்டனர். இருவரும் பள்ளிவாசலுக்குச் சென்று ஒன்றாகவே தொழுதனர். தொழுகை முடிந்ததும் அவர்கள் கைலாகு கொடுத்தனர். கலகலப்பாகப் பேசிக் கொண்டனர்.





திருமதி லிம் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். அவர் புத்த பெருமானை வணங்குவார். அடிக்கடி புத்த விகாரம் செல்வார். திருமதி லிம் பூக்கள் வாங்கிச் செல்வார். சமய போதனைகளைப் பற்றி மற்ற நண்பர்களுக்கும் விளக்குவார்.

2.2.21 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- மேலும் சில இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் குழு முறையில் உருவாக்கி வாசித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 81

# பாடம் 3 தேர்த் திருவிழா

## வாசித்து எழுதுக.

தாத்தாவின் கிராமத்திற்குச் சென்றோம். அங்கே தேர்த் திருவிழாவைப் பார்த்தோம். மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்திருந்தனர். மத்தள முழக்கம் கணீரென ஒலித்தது. இளைஞர்கள் அடக்கமாகவும் ஒழுக்கமாகவும் நடந்து கொண்டனர். பட்டணத்திலிருந்தும் பலர் வந்திருந்தனர்.

கிராமத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அப்பா கூறினார். கிராம மக்களின் ஊக்கத்தையும் நாட்டத்தையும் நாம் போற்றவே வேண்டும். இரத ஊர்வலத்தின் போது பக்தர்கள் அர்ச்சனை செய்தனர். சில இயக்கங்கள் பொது மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கின. எளியவர் மீது இரக்கம் காட்டுவதும் ஒருவகை சிந்தனை மாற்றம் என அம்மா கூறினார்.



**சொல்வளம்**

- முழக்கம்
- திரண்டு
- ஊக்கத்தை
- நாட்டத்தை
- இரக்கம்

3.3.21 - க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறிதல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- சூழலுக்குப் பொருத்தமான மேலும் சில இரட்டிப்புச் சொற்றொடர்களைக் கூறி எழுதுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 82

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிக.

### ஐம்பொறி ஆட்சிகொள்

திருமுறை ஓதும் போட்டியில் முதல் பரிசை வென்ற தேன்மொழியை அரங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் பாராட்டினர். அதற்குக் காரணம் அவளின் இனிமையான குரல்தான். பெயருக்கு ஏற்றவாறு ஈர்க்கும் குரலை உடைய அவளை மேடையில் பெரியோர் பெருமைப்படுத்தினர். சிறு வயதிலேயே இசையில் ஆர்வம் காட்டிய அவளைப் பெற்றோர் மேலும் ஊக்குவித்தனர்.







முழுமையான ஈடுபாட்டுடன் பாடுவதும் இசைக் கருவிகளை இசைப்பதும் தேன்மொழியின் பொழுது போக்காகும். ஐம்புலன்களையும் நல்ல நெறியில் செலுத்தும் ஆற்றல் பெற்றவள் தேன்மொழி.

## ஒற்றுமை வலிமையாம்



முதியவர் ஒருவர் தமது ஐந்து புதல்வர்களையும் அருகில் அழைத்தார். அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளும் அவர்களிடம் ஆளுக்கொரு குச்சியைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். ஐவரும் மிக எளிதில் குச்சிகளை உடைத்தனர்.

அடுத்ததாக, அவர்களிடம் ஒரு விறகுக் கட்டை அப்படியே உடைக்கச் சொன்னார். ஒவ்வொருவராக முயன்றனர். ஆனால், உடைக்க முடியவில்லை. முதியவர் தமது புதல்வர்கள் ஐவரிடமும் ஒற்றுமையாக இருப்பதால் ஏற்படும் வலிமையினை விளக்கினார். அன்று முதல் அவர்கள் ஐவரும் ஒற்றுமையாக இருந்தனர்.

### புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **ஐம்பொறி ஆட்சிகொள்.**
  கண், காது, மூக்கு, வாய், மெய் முதலான ஐம்புலன்களையும் நல்ல நெறியில் செலுத்தும் ஆற்றலைப் பெற்றிடு.
- **ஒற்றுமை வலிமையாம்.**
  ஒன்றுபட்டு வாழ்வதே பலமாகும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- புதிய ஆத்திசூடியையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- புதிய ஆத்திசூடியையும் பொருளையும் எழுதி வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அன்பானவர் / பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 83


பாடம் 5 இலக்கணம்

## இடம் அறிக.



### தன்மை

- நான் கடற்கரைக்குச் சென்றேன்.
- என் தோழியுடன் பேருந்தில் சென்றேன்.
- நாங்கள் ஓவியம் வரைந்தோம்.
- எங்கள் குடும்பத்துடன் திருவிழாவிற்குச் சென்றோம்.
- "யான் அப்படியே செய்கிறேன்" என்றார் மந்திரி.
- "யாம் அச்செயலைச் செய்யவில்லை," என்றார் அரசர்.



### முன்னிலை

- நீ அந்த விபத்தைப் பார்த்தாயா?
- நீங்கள் அனைவரும் சிறந்தவர்கள்.
- உன் புத்தகத்தைக் கொடு.
- உமது ஊர் எது?
- நீர் எங்கு வசிக்கிறீர்?
- நீவிர் பல்லாண்டு வாழ வேண்டும்.
- உங்கள் இல்லத்திற்கு வர உள்ளோம்.

### படர்க்கை



- அவன் அலுவலகத்தில் வேலை செய்கிறான்.
- அவள் சேலை அணிந்து சென்றாள்.
- தயாளன் காற்பந்து விளையாடுகிறான்.
- அவர்கள் நெருங்கிய நண்பர்கள்.
- அவை அனைத்தும் நம் பொருள்கள்.
- மன்னர் நல்லாட்சி செய்தார்.

5.3.9- தன்மை, முன்னிலை, படர்க்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- இடம் பற்றிய இலக்கணத்தை விளக்குதல்.
- வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- வாக்கியங்களில் கூறப்பட்ட தன்மை, முன்னிலை, படர்க்கையைக் குறிக்கும் சொற்களைப் பட்டியல் இடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 84

# தொகுதி 24 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்


## பாடம் 1 தூய தமிழ்

### திருத்திப் பேசி உரையாடுக.


1




2




3




1.7.4 - பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரையாடலை வாசித்தல்.
- பேச்சுவழக்குச் சொற்களைத் திருத்திக் கூறுதல்.
- திருத்திய பேச்சுவழக்குச் சொற்களைக் கொண்டு உரையாடலை மீண்டும் வாசித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் 21 **ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 85-87

# பாடம் 2 மின்னஞ்சல்

## மின்னஞ்சலை வாசித்து அறிக.




அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். மின்னஞ்சல்வழி உங்களோடு தொடர்பு கொள்ள நெடுநாள் ஆசை கொண்டேன். இன்று அது நிறைவேறியுள்ளது. என்னுடன் பள்ளி விடுதியில் தங்கியுள்ள நண்பர்கள் மிகவும் நல்லவர்கள். அனைவரும் தன்னலம் அற்றவர்கள். நல்ல எண்ணங்களை மனத்தில் கொண்டு பழகுபவர்கள். இன வேறுபாடின்றிச் சொந்தச் சகோதரர்களைப் போல் பழகுகின்றனர். நாங்கள் கள்ளம் கபடம் இல்லாமல் ஒருவரோடு ஒருவர் அன்புள்ளத்தோடு உதவிக் கொள்கிறோம்.

சில வேளைகளில் உணவுகளையும் பகிர்ந்து உண்கின்றோம். எந்த ஒரு வேறுபாடும் இன்றிச் சின்னச் சின்ன மகிழ்ச்சிகளில் எங்களை மறந்து சிரித்து மகிழ்கிறோம்.

உங்கள் இல்லம் வரும்போது நிச்சயம் எனது நண்பர்களை அழைத்து வருகிறேன். விட்டுக் கொடுத்துப் பழகும் அந்தத் தோழர்களைக் கண்டால் நீங்களும் பிரியம் காட்டுவீர்கள். மீண்டும் தொடர்பு கொள்கிறேன். உங்கள் மின்னஞ்சலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

அன்புடன்,
தமிழன்பன்.

**2.2.22 -** ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மின்னஞ்சலை ஏற்ற தொனியுடன் வாசித்தல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைக் கண்டறிதல்.
- இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைப் பட்டியலிட்டு வாசித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 88

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 3 திறன்பேசி

## உரையாடலை வாசித்திடுக; எழுதுக.

கண்மணி: அப்பா! உங்கள் திறன்பேசி என்ன விலை?

அப்பா: விலை சற்று அதிகம்தான் கண்மணி. ஏன் கேட்கிறாய்?

கண்மணி: தெரிந்து கொள்ளத்தான் அப்பா. அண்ணனிடம்கூட இதே போன்று உள்ளதே!

அப்பா: ஆமாம் கண்மணி. உன் அண்ணன் நான் கூறிய அறிவுரைகளைக் கேட்டு நடந்தான். தேர்வில் நல்ல புள்ளிகளையும் பெற்றான். அதனால்தான் திறன்பேசியைப் பரிசளித்தேன்.




கண்மணி: பயனுள்ள சாதனம்தான் அப்பா.

அப்பா: சில ஆண்டுகளுக்குப் பிறகு நீ திறன்பேசி வாங்கிப் பயன்படுத்தலாம். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல நீ தொடர்ந்து சேமித்து வை. சிறு வயதிலேயே பணத்தைச் சேமிப்பது சிறந்த செயலாகும் கண்மணி.

3.3.22 - ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகம் ஏற்று வாசித்தல்.
- உரையாடலில் உள்ள இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களை அறிதல்.
- மேலும், சில இரட்டிப்பு எழுத்துச் சொற்றொடர்களைச் சுயமாக உருவாக்கத் துணைபுரிதல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 89-90

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிக.

ப. குமார்
24, தாமான் மெலாத்தி,
34000 தைப்பிங், பேராக்.
26.10.2018

அன்பு மகளுக்கு,

அப்பா எழுதிக் கொள்வது. இங்கு நானும் உன் தாயாரும் நலம். அதுபோல நீயும் நலமாக இருக்க இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

அரசாங்கத் தேர்வை மிகச் சிறப்பாக எழுதி முடித்துள்ளாய் என்று அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. தேர்வு முடிவு வரும் வரை ஏதாவது பயனுள்ள வேலைகளைச் செய். **ஓய்தல் ஒழி** என்பது போல நாம் வெறுமனே இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள பட்டணத்தில் கணினி வகுப்பு ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வகுப்பில் சேர்ந்து கணினி இயக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

சில நேரங்களில் தலைவலி ஏற்படுவதாகவும் கூறியிருந்தாய். எடுத்ததெற்கெல்லாம் மருந்து உட்கொள்ள வேண்டாம். **ஔடதம் குறை** என்பதைக் கடைப்பிடிப்பாய் என நம்புகிறேன். சரியான நேரத்தில் உறங்க வேண்டும். போதுமான தூக்கம், ஓய்வு இருந்தால் இது போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

இத்துடன் விடைபெறுகிறேன். மற்றவை உன் பதில் கடிதம் கண்டு.

நன்றி.

அன்புடன்,
உன் அப்பா,
ப. குமார்



### சொல்வளம்

- வெறுமனே
- தவிர்க்க
- ஆற்றலை
- மீட்டுவதில்
- ஔடதம்

## புதிய ஆத்திசூடியும் பொருளும்

- **ஓய்தல் ஒழி.**
  எதையும் செய்யாமல் வெறுமனே இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- **ஔடதம் குறை.**
  எடுத்ததெற்கெல்லாம் மருந்து உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

4.8.1 - இரண்டாம் ஆண்டுக்கான புதிய ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உறவுக் கடிதத்தை வாசித்தல்.
- புதிய ஆத்திசூடியையும் பொருளையும் அறிந்து கூறுதல்.
- புதிய ஆத்திசூடிக்குப் பொருத்தமான வேறு சூழலை உருவாக்கிக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** சிந்தனையாளர் **உ.சி.தி:** நன்னெறிப் பண்பு 21 **ஆம் நூற்றாண்டு:** சீர்தூக்கிப் பார்த்தல்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 91

பாடம் 5 

# இலக்கணம்

## வினைமுற்றை அறிக.

### அருந்ததியின் நாட்குறிப்பு.

**அக்டோபர் 14**

பள்ளித் தேர்வு முடிவுற்றது. மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினேன். வீட்டிற்கு உறவினர்கள் சிலர் வந்திருந்தனர். அவர்களைக் கண்டு நலம் விசாரித்தேன்.

**அக்டோபர் 15**

காலைச் சிற்றுண்டி உண்டோம். கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தோம். கடற்கரைக்குச் செல்லத் திட்டமிட்டோம். இரவில் தங்கு விடுதியைச் சென்றடைந்தோம்.

**அக்டோபர் 16**

காலையில் கடற்கரைக்குச் சென்றோம். கடற்கரை மணலில் விளையாடினோம். மாமாவும் அண்ணனும் நீச்சல் அடித்தனர். தாகத்திற்கு இளநீர் குடித்தோம். தென்றல் காற்று வீசியது. அனைவரும் படகில் பயணம் செய்தோம். மாலையில் வீடு திரும்பினோம்.

**அக்டோபர் 17**

அதிகாலையில் எழுந்தோம். காலை உணவு உண்டோம். மதிய உணவிற்கு அத்தை மண் சட்டியில் மீன்கறி சமைத்தார். ஒன்றாகச் சேர்ந்து உண்டோம். அத்தையின் சுவையான சமையலுக்குப் பாராட்டுத் தெரிவித்தோம். இன்றைய நாள் இனிமையாக அமைந்தது. இறைவனுக்கு நன்றி கூறினேன்.

5.3.10 - வினைமுற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்குறிப்பினைப் பிழையற வாசித்தல்.
- வினைமுற்றுச் சொற்களை அறிந்து கூறுதல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 92

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்